# தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்கள் (1990-2007)

வே. சபாபதி
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம்
sabavenu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இக்கட்டுரை தொன்னூறுகளிலிருந்து இன்றுவரையில் மலேசியத் தமிழிலக்கியத்தில் நாவல் பற்றிய பொதுவான செய்திகளை விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியத் திருப்புமுனைகள், கிரியா ஊக்கிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு அதிகமான பங்களிப்பினைச் செய்துள்ள நாவலாசிரியர்களை அடையாளங்கண்டு குறிப்பிடுதல் ஆகும். தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் வளர்ச்சியில் காணப்படும் நாவல், குறுநாவல் பற்றிய ஒருமைப்பாடு, வேறுபாடு ஆகியவற்றை விளக்குதல், தொன்னூறுகளுக்குப்பின் குறிப்பாக அண்மைய பத்தாண்டுகளில் (1997-2007) வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தின் முக்கியப் போக்குகளை அறிவதோடு அவற்றின் தரமும் திறமும் பற்றி விளக்குகின்றது. தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் காணப்படும் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப் பிரச்சினைகளை அடையாளங்கண்டு விளக்குதல் மற்றும் தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் வெளிப்படும் மலேசிய மண்ணின் மணம், அடையாளங்கள், மலேசியத் தன்மைகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு வெளிப்படுத்துதல் ஆகியனவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்**: நாவல் வளம், மலேசிய தமிழ் நாவல், மலேசிய இலக்கியம், மலேசிய தமிழ் நாவல் செல்நெறிகள்

*Abstract*

This article is aimed at giving the details of the development Novels, the catalyst, the important milestones, their trends, their thematic approaches and the turning points in the history of novel productions that have been witnessed in Malaysian setting since 1990's Special focus has been given on studying the catalyst of novel and short novels development, their quality and their nature, especially in last decades of 20th century (1997-2007). Interest has been given in knowing and verifying the exposition of phenomena, especially the social issues revolving the Indian community that have been captured in these novels. Efforts also have been given in studying the aspects of the Malaysian representation in the novels that turn them be unique from others, in the novels that have been produced after 1990's.

Keywords: Novel Resources, Malaysian Tamil Novel, Malaysian Literature, Malaysian Tamil Novel Trends

## 1. இக்கட்டுரையின் நோக்கம்:

இக்கட்டுரை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அவை:-

- தொன்னூறுகளிலிருந்து இன்றுவரையில் மலேசியத் தமிழிலக்கியத்தில் நாவல்பற்றிய பொதுவான செய்திகளை விளக்குதல்,
- தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் காணப்படும் முக்கியத் திருப்புமுனைகள், கிரியா ஊக்கிகள், நிகழ்வுகள் ஆகியவற்றை அறிந்து விளக்குதல்,
- தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு அதிகமான பங்களிப்பினைச் செய்துள்ள நாவலாசிரியர்களை அடையாளங்கண்டு குறிப்பிடுதல்,
- தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் வளர்ச்சியில் காணப்படும் நாவல், குறுநாவல் பற்றிய ஒருமைப்பாடு, வேறுபாடு ஆகியவற்றை விளக்குதல்,

- தொன்னூறுகளுக்குப்பின் குறிப்பாக அண்மையப் பத்தாண்டுகளில் (1997-2007) வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தின் முக்கியப்போக்குகளை அறிவதோடு அவற்றின் தரமும் திறமும் பற்றி விளக்குதல்,
- தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் காணப்படும் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப்பிரச்சினைகளை அடையாளங்கண்டு விளக்குதல்,
- தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் (1997-2007) உள்ளடக்கத்தில் வெளிப்படும் மலேசிய மண்ணின் மணம், அடையாளங்கள், மலேசியத் தன்மைகள் ஆகியவற்றை அடையாளங்கண்டு வெளிப்படுத்துதல் ஆகியன.

மேற்காணும் நோக்கங்களின் அடிப்படையில் இக்கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான தக்கச் சான்றுகள் உடனே வழங்கப்பட்டுள்ளன.

**2. நாவல் இலக்கியம்**

சமுதாயத்தைச் சிறப்பாகவும் ஆழமாகவும் சித்திரிக்கின்ற, பிரதிபலிக்கின்ற தற்கால இலக்கிய வடிவங்களுள் நாவல் இலக்கியத்திற்கு எப்பொழுதுமே தனியிடம் உண்டு. ஒவ்வொரு காலப்பகுதியிலும் நிகழும் சமுதாய நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் முக்கிய ஆவணமாகத் திகழ்வது நாவல் இலக்கியமே. நிகழ்காலச் சமுதாயம் எப்படி இருக்கிறது என்பதனை எதார்த்தப்பூர்வமாகப் பிரதிபலித்துக்காட்டுவதோடு சமுதாயம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவ-தாகவும் நாவல்கள் அமைகின்றன. மெத்தப்படித்தவர், ஓரளவு படித்தவர் என அனைவரையும் எளிதில் அது சென்றடைவதால் சமுதாயத்தில் இன்று நாவலுக்கென்று தனி மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டுவிட்டது. அதனால், பழஞ்சமூகத்தில் காவியம் பெற்றிருந்த இடத்தைத் தற்காலச் சமூகத்தில் நாவல் பெற்றிருப்பதில் வியப்பேதுமில்லை.

சமூகவாழ்வின் அனைத்துக் களங்களுக்குள்ளும் நுழைந்து வாழ்வின் அர்த்தங்களைத் தேடுவதும் அர்த்தங்கள் அழிந்துவிட்ட நிலையில் வாழ்வின் அவலத்தைச் சொல்வதும் எதிர்கால நோக்கில் வாழ்வின் நிறைவை எடுத்துக்காட்டுவதும் நாவலின் செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. எனவே, இன்றைய நிலையில் சமூகவாழ்க்கையிலும் தனிமனிதவாழ்க்கையிலும் காணப்படும் பிரச்சினைகளையும் அவற்றுக்குத் தீர்வினையும் சிந்திப்பதற்குத் தகுந்த வாயப்பினை வாசகர்களுக்கு நாவல் இலக்கியம் ஏற்படுத்தித் தருகின்றது. இத்தகைய சிறப்புவாய்ந்த நாவல் இலக்கியம் மேனாட்டில் தோன்றியது; இந்திய மண்ணிற்கு ஆங்கிலேயர் ஆட்சியில் இறக்குமதி செய்யப்பட்டது. தமிழிலும் தோன்றி, அது தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் தாக்கத்தினால் அது மலேசிய மண்ணிலும் தமிழில் காலூன்றித் தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருகின்றது.

**3. தமிழகத்தில் நாவல் இலக்கியம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (1879) தமிழில் நாவல் இலக்கியம் தோன்றி வளரத் தொடங்கியது. மாயூரம் வேதநாயகம் பிள்ளை (பிரதாப முதலியார் சரித்திரம்), அ.மாதவையா (பத்மாவதி சரித்திரம்), ராஜம் ஐயர் (கமலாம்பாள் சரித்திரம் அல்லது ஆபத்துக்கிடமான அபவாதம்), தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை (கமலா சரித்திரம், ஞானாம்பிகை), பண்டித நடேச சாஸ்திரி (தீனதயாளு, திக்கற்ற இரு குழந்தைகள்), சு. வை. குருசாமி சர்மா (பிரேம கலாவத்யம்) போன்றோர் தொடக்க காலத்தில் நாவல் இலக்கியம் இன்னது என்று தமிழ் மக்களுக்கு உணர்த்தும் முயற்சியில் வெற்றி பெற்றனர். மேற்கத்திய நாகரிகத்தின் தாக்குதலால் தமிழ்மக்களின் வாழ்வில் ஏற்பட்ட சிதைவுகளை இவர்களின் நாவல்கள் வெளிப்படுத்தின. எனினும், இவர்களைத் தொடர்ந்து நாவல் எழுத வந்தவர்களிடம் காணப்பட்ட மேனாட்டுத் தாக்கத்தினால் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கதில் மர்மமும் துப்பறிதலும் தமிழ்நாவலின் முக்கியப் பண்புகளாக மாறின. இதனால் பெரும்பாலான தமிழ்நாவல்கள் தமிழர்களின் வாழ்வையோ அதில் ஏற்பட்ட நெருக்கடிகளையோ அல்லது பிரச்சினை-களையோ காட்டத் தவறின. இதனை “அக்கால எழுத்தாளர்கள் நாவல் எனும் புதிய இலக்கிய வடிவத்தை ஆமோகித்து நின்றார்களே- அன்றி அதன் பேராற்றலைப் புரிந்து கொண்டார்களில்லை” எனவரும் கூற்று உணர்த்துகின்றது.(1) எனவே, இக்காலப்பகுதியில் நாவல் இலக்கியத்தை எந்த அளவுக்கு வீழ்ச்சியுறச் செய்யமுடியுமோ அந்த அளவிற்கு வீழ்ச்சியுறச் செய்தனர்.

**4. மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம்**

தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாவல் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் போதுதான் மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் மெல்லத் தோன்றி வளரத் தொடங்கியது. மலேசியாவின் முதல் தமிழ் நாவல் இலக்கியம் மீனாட்சி அல்லது மலாய்நாட்டு மங்கை எனும் தலைப்பில் 312 பக்கங்களில் 1916-ஆம் ஆண்டில் கா.கந்தையா பிள்ளை என்பவரால் கிள்ளானில் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.(2) 1916-க்கும் 1938-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏறத்தாழ இருபத்தைந்து நாவல்கள் இங்கு நூல்வடிவில் வெளியாகியுள்ளன.

இவற்றுள் மிகுதியானவை அப்போதைய மலாய்நாட்டுப் பத்திரிகைகளில் தொடர்கதைகளாக வெளிவந்தது இங்குக் குறிப்பிடத்-தக்கது. இவை தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து வந்தக் குடியேறிகளால் எழுதப்பட்டுள்ளன. எனவே, இந்நாவல்களின் கதை, கரு, களம், பின்னல், கதைமாந்தர், உரையாடல், மொழிநடை போன்ற-வற்றில் தமிழக, இலங்கைச் சார்புகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. இவற்றில் மலேசியச் சூழல்களோ கால, களப்பின்னணிகளோ மிகவும் அருகியே காணப்பட்டன. தமிழ்நாவலின் வீழ்ச்சிக்காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட அத்தனைப் போக்குகளும் பண்புகளும் தொடக்ககாலத்தில் எழுந்துள்ள மலேசியத் தமிழ் நாவல்களிலும் காணப்பட்டன. அவற்றுள் சிலவாகத் துப்பறியும் போக்கு, மர்மப்பண்பு, இரட்டைப் பெயரிடும் போக்கு, கதையோடு தொடர்பற்ற பகுதிகளை இணைத்தல், கதையின் இடையிடையே நாவலாசிரியர் குறுக்கிட்டுப் பேசுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

விடுதலைக்குப் பின்னர் மலேசியத் தமிழ்நாவல்களுள் மிகுதியானவை மலேசியாவிலேயே பிறந்து வளர்ந்து தமிழ்கற்ற இளைய தலைமுறையினரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் மலேசிய மண்ணின் மணம் முழுமையாகக் கமழ்வதனைக் காணமுடிகின்றது. இவற்றுள் பல நாவல்கள் வயிற்றுப்பிழைப்புக்காக இந்நாட்டில் குடியேறிய இந்தியச்சமுதாயத்தின் உள்ளும் புறமும் அலசி ஆராய்வனபோல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. விடுதலைக்குப் பின்னரிலிருந்து தொன்னூறுவரை (1957-1990) ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மலேசிய இந்தியச் சமூகம் அடைந்த வளர்ச்சியும் தளர்ச்சியும் அடையாளங் காணப்பட்டு அவற்றுக்கான காரணக் காரியங்களையும் பொருத்தமான தீர்வுகளையும் கூறும்வகையில் அமைந்துள்ள நாவல்களுள் துயரப்பாதை (1958), செம்மண்ணும் நீலமலர்களும் (1969), இலட்சியப் பயணம் (1975), பசித்திருக்கும் இளங்கொசுக்கள் (1978), மரவள்ளிக்கிழங்கு (1979), வானத்து வேலிகள் (1982), பயணங்கள் முடிவதில்லை (1988) ஆகியன குறிப்பிடத்தக்கன. இந்நாவல்களில் தோட்டப்புற மக்களின் துன்பவாழ்வியல், தோட்டத்துண்டாடல் பிரச்சினை, சமூகத்தில் காணப்படும் செல்லரித்த போக்குகள், இளையதலைமுறையினரிடம் காணப்படும் கூடாப் பழக்கவழக்கங்கள், மேலோங்கிவரும் பொருளியல் சிந்தனைகள், தனிமனிதச் சிக்கல்களும் உணர்வுகளும், அரசியல்வாதிகளின் முரண்பட்ட போக்குகள் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

### 5. தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம்

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியானது தரத்திலும் எண்ணிக்கையிலும் ஏறுமுகம் கண்டதாக உள்ளது குறிப்பிடத்-தக்கது. விடுதலைக்குப்பின் ஒவ்வொரு பத்தாண்டிலும் (Decade) நாவல்களின் எண்ணிக்கை கூடியுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் எண்பதுகளில் நூல்வடிவில் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை மொத்தம் 27 ஆகும். ஆனால், இந்த எண்ணிக்கையானது தொன்னூறுகளில் (1990-1999) 43 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்-தக்கது. இவற்றுள் மிகுதியானவை குறுநாவல்களாகவே அமைந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. குறைவான படைப்புகளே பக்கங்களால் நீண்டு நாவல்களாக(நெடுங்கதை) அமைந்துள்ளன.

### 5.1 நாவல், குறுநாவல் ஆகியவற்றிற்கான விளக்கம்

பொதுவாக நாவல் (Novel) என்பது நெடுங்கதையாகக் கருதப்படுகின்றது. குறுநாவல் (Novellette) அதனினும் சிறியதாகக் கருதப்படுகின்றது. இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேறுபாட்டைத் தமிழில் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் இன்னும் தெளிவாக உணரவில்லை என்ற கருத்து உண்டு.(3) நாவலைவிடச் சிறியதாய், சிறுகதையைவிடப் பெரியதாய் அமைந்திருப்பது குறுநாவல் என்று பொதுவாக விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், நாவல், குறுநாவல் இரண்டிற்குமிடையே காணப்படும் வேறுபாட்டை வெறும் பக்க அளவால் மட்டும் அளவிடக்கூடியதன்று. இதனைச் "சிறுகதையிலும் பார்க்க நீளமானதாகவும் நாவல்களிலும் பார்க்கக் குறுகியதாகவும் உள்ள கதை அமைப்பே குறுநாவல் என விளங்கிக் கொள்ளுதல் பாமரத்தனமானது"(4) எனவரும் பகுதியால் அறியலாம். மேலும், "நாவலின் குறுக்கமும் சிறுகதையின் நீட்சியும் குறுநாவலை உருவாக்கியிருக்குமோ என்ற ஐயம் எழுவது இயற்கை"(5) எனவரும் பகுதியாலும் "சிறுகதைக்கும் நாவலுக்கும் பிறந்த குழந்தையாகக் குறுநாவலைக் கருதலாம்"(6) எனவரும் பகுதியாலும் அறியலாம். மேலைநாடுகளில் குறுநாவலுக்கான விளக்கத்தையும் இலக்கணத்தையும் கண்டு தெளிந்துள்ளனர். ஆனால், தமிழில் இதற்கான விளக்கமும் இலக்கணமும் இன்னும் முறையாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ளப்படவில்லை. அதனால் தமிழ்ப்படைப்பாளர்கள் மத்தியில் அதுபற்றிய ஐயங்கள் தீர்க்கப்படாமல் உள்ளன.

குறுநாவல் நாவலின் இலக்கணங்களைப் பெற்று பக்க அளவில் சிறியதாக அமைந்திருந்தாலும் கதைநிகழ்ச்சிகளுக்கு முதன்மை கொடுத்துப் படைக்கப்பட்டிருக்கும் தன்மையைப் பெற்றது. குறுநாவலில் ஒரு கருத்தை முழுமையாக விளக்கப்படும் அளவுக்குக் கதைநிகழ்ச்சிகள் பலவாக அமைக்கப்பட்டிருக்கும். கதைமாந்தர்களின் பண்பில் பல கோணங்கள் விவரிக்கப்படாமல் குறிப்பிட்ட சில பண்புகள் மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். தேவையற்ற வருணனை, விளக்கம், செய்தி, கதைமாந்தர், உரையாடல், சொற்றொடர்

போன்றவை அதிகளவு காட்டப்படாது. கிளைக்கதைகளை உருவாக்காது முதன்மைக்கதையிலேயே முழுக்கவனம் செலுத்தப்பட்டிருக்கும்.

தமிழில் குறுநாவல் என்ற பிரிவைத் தொடங்கிய எழுத்தாளர் யார் என்பது சரியாகத் தெரியவில்லை என்ற கருத்தும் ஏறத்தாழ 1960-ஆம் ஆண்டளவில் ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது என்ற கருத்தும் இங்குக் கருத்ததக்கது.(7) தொடக்ககாலத்தில் தமிழில் கலைமகள், அமுதசுரபி போன்ற இதழ்கள் குறுநாவலை வளர்த்துள்ளன. காலப்போக்கில் மங்கை, மங்கையர் மலர், மஞ்சரி, தீபம், தாமரை போன்ற இதழ்களும் குறுநாவலை வளர்த்துள்ளன. குறுநாவலை மலேசியாவில் மயில், இதயம், நயனம் போன்ற வாரமாத இதழ்களும் வெளிவரும் எல்லா நாளிதழ்களும் வளர்த்துள்ளன. இன்றைய நிலையில் குறுநாவல்கள் வாசகர்களின் ஆர்வத்தையும் காலச்சூழலின் தேவையையும் கருதியே படைக்கப்படுகின்றன.

மலேசியத் தமிழ்ப்படைப்பாளர்கள் பலருக்குக் குறுநாவல் பற்றிய அறிவும் தெளிவும் இருப்பதாக இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் அவர்கள் வானம் காணாத விமானங்கள்(1999) எனும் நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளதானது தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள், மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் பற்றிய நல்ல தகுதி மதிப்பீடாக அமைந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. தொன்னூறுகளில் மலேசியாவில் மிகுதியான குறுநாவல்கள் வெளியீடு கண்டதற்கு அதில் ஏற்பட்டுள்ள பிடிப்பும் தெளிவும் ஒரு காரணம் எனலாம்.

### 5.2 தொன்னூறுகளுக்கு முந்தியவை நூல்வடிவம் பெறுதல்

தொன்னூறுகளில் பதிப்பிக்கப்பட்ட நாவல்களுள் சில ஏற்கெனவே எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இதழ்களில் தொடராகவும் நூலாகவும் வெளிவந்தவை. அவ்வகையில் ந.சந்திரனின் இதயரோஜா (1991), மா.இராமையாவின் அழகின் ஆராதனை (1992), சுவடுகள் (1994), சங்கமம் (1995), நா. ஆ. செங்குட்டுவனின் விடியலுக்காக (1998), விலங்கு (1998), நெருப்புக்கொடிகள் (1998), எம், ஏ. இளஞ்செல்வனின் மோகங்கள் (1999), பசித்திருக்கும் இளங்கொசுக்கள் (1999), கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் (1999) ஆகியன இவ்வகையில் அமைகின்றன.

### 5.3 தொகுப்புகளாக வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்கள்

தொன்னூறுகளில் வெளிவந்துள்ள நாவல்களின் அமைப்புமுறையில் குறிப்பிடத்தக்க தன்மை காணப்படுகின்றது. நான்கு நூல்கள் குறுநாவல்களின் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு மேற்பட்ட குறுநாவல்கள் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. அவை வா! அருகில் வா! (1990), விடியலுக்காக (1998), கோடுகள் கோலங்களானால் (1998), வானம் காணாத விமானங்கள் (1999) ஆகியன. இவற்றுள் முதலாவதான வா! அருகில் வா! எனும் தொகுப்பில் வா! அருகில் வா!, நெஞ்சுக்குத் தெரியும் ஆகிய இரண்டு குறுநாவல்களும் விடியலுக்காக எனும் தொகுப்பில் விடியலுக்காக, விலங்கு ஆகிய இரண்டு குறுநாவல்களும் கோடுகள் கோலங்களானால் எனும் தொகுப்பில் கோடுகள் கோலங்களானால், நொண்டிப்பறவை ஆகிய இரண்டு குறுநாவல்களும் வானம் காணாத விமானங்கள் எனும் தலைப்பில் வானம் காணாத விமானங்கள், மோகங்கள், பசித்திருக்கும் இளம்கொசுக்கள், கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் ஆகிய நான்கு குறுநாவல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. தவிர, பேராசிரியர் ரெ.கார்த்திகேசு அவர்கள் தம்முடைய இன்னொரு தடவை, ஊசி இலைமரம் ஆகிய இரு தொகுப்புநூல்களில் சிறுகதைகளோடு சில குறுநாவல்களையும் தொகுத்துத் தந்துள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இன்னொரு தடவை எனும் தொகுப்புநூலில் நல்லவராவதும் தீயவராவதும், ராகதேவதை ஆகிய இரு குறுநாவல்களையும் ஊசி இலைமரம் எனும் தொகுப்புநூலில் புழுத்துளைகள், தீக்காற்று ஆகிய இரு குறுநாவல்களையும் சேர்த்துத் தொகுத்துள்ளார். படைப்பாளிகள் தங்கள் படைப்புகள் இதழ்களிலேயே மக்கி மடிந்துவிடக் கூடாது; கண்டிப்பாக நூல் வடிவில் வரவேண்டும் என்ற நன்னோக்கத்தில் இவ்வாறு ஒரே நூலில் ஒன்றுக்கு மேற்பட்ட குறுநாவல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளதனைக் காண முடிகின்றது.

### 5.6 மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு ஊக்கமளித்த நிகழ்வுகள்

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு ஊக்கமும் எழுச்சியும் தரும் வகையில் பல இலக்கிய முயற்சிகள் நடந்தேறியுள்ளன. இக்காலப்பகுதியில் நாவல்களின் எண்ணிக்கை உயர்வுக்கு இவ்விலக்கிய முயற்சிகளும் காரணங்களாக அமைந்திருந்தன எனில் மிகையில்லை. இனி, அவை ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன.

#### 5.6.1 மலேசியத் தமிழ்நாவல் கருத்தரங்கு (1992)

மலேசியத் தமிழ் நாவல் வரலாற்றில் முதன்முறையாகத் தேசிய அளவில் இக்கருத்தரங்கு பிப்ரவரி, 1992-இல் மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையினரின் பெருமுயற்சியின் விளைவாக ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு நாள் நிகழ்வாக நடந்தேறிய இக்கருத்தரங்கில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தொடக்கநாள் முதல் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. மலேசியத் தமிழ் நாவலின் தரம், திறம் ஆகியவற்றைக் கண்டறியும் நோக்கத்தில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் மலேசியத் தமிழ்நாவலை ஒட்டிய ஐந்து கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வாளர்களால் வாசிக்கப்பெற்று கருத்துப் பரிமாற்றமும் செய்யப்பட்டது.(8) பேராசிரியர் ரெ. கார்த்திகேசு, வே. சபாபதி, எம்.கிருஷ்ணன், லெட்சுமி மீனாட்சிசுந்தரம் ஆகியோர் இக்கட்டுரைகளைப் படைத்தனர். எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பொதுமக்களும் என நூற்றுக்கணக்கானோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கு நாவல் எழுதிக்கொண்டிருந்தோர்க்கும் எழுதவிரும்பு-வோர்க்கும் மிகுந்த பயனைத்தந்த நிகழ்வாக அமைந்திருந்தது. இந்நிகழ்வுக்குப் பிறகு வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு அவற்றின் தரமும் கூடியுள்ளது. ஆக, மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கு மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

**5.6.2 சிறுகதையாசிரியர்களும் நாவல் முயற்சிகளும்**

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல்களின் எண்ணிக்கை கூடியதற்கு நாவல் இலக்கியத்தின்மீது மலேசியத் தமிழ் எழுத்தாளர்-களுக்குக் குறிப்பாகச் சிறுகதை ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட ஈடுபாடும் ஆர்வமும் ஒரு காரணமாக அமைகின்றது. இதுநாள் வரையில் சிறுகதையின்மீது மிகுந்த ஈடுபாடுகொண்டு எழுதிக்கொண்டிருந்தவர்கள், ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு எழுத்துத்துறையில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றபின்னர் எழுத்துத்துறையில் தங்களின் ஆற்றலைக்காட்ட அடுத்த கட்ட நடவடிக்கையாக, ஒரு மாற்றமாக நாவலின் பக்கம் அவர்களின் கவனத்தைத் திருப்பியுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் கோலலங்காட் அ.ரெங்கசாமி, மு.அன்புச்செல்வன், ஆர்.சண்முகம், சை.பீர் முகம்மது, பூ.அருணாசலம், பாவை, சரஸ்வதி அரிகிருஷ்ணன், நிர்மலா பெருமாள் போன்றோர் அவ்வாறு சிறுகதைத் துறையிலிருந்து நாவல்துறைக்கு வந்து சேர்ந்தனர். சிறுகதை ஆசிரியர்கள் நாவல் எழுதுவதில் புதுமையொன்றும் இல்லை. தமிழக, இலங்கை நாவல் இலக்கிய வரலாற்றைப் பார்க்கும்போது சிறுகதையாசிரியர்களாய் இருந்தவர்களே சிறந்த நாவல் ஆசிரியர்களாகவும் இருந்து சிறந்த படைப்புகளைத் தந்துள்ளனர். அகிலன், த. ஜெயகாந்தன், செ. கணேசலிங்கன் போன்றோர் தொடக்கத்தில் சிறுகதைத்துறையில் இருந்து, பின்னர் நாவல்துறைக்கு வந்தவர்கள் ஆவர். ஆக, இங்குத் தொன்னூறுகளில் சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கியவர்களும் நாவல் ஆசிரியர்களாக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**5.6.2 மூத்த எழுத்தாளர்களின் நாவல் பங்களிப்பு**

தொன்னூறுகளில் மூத்த எழுத்தாளர்களின் பங்களிப்பு நாவல்துறையில் கணிசமாகக் காணப்படுகின்றது. இங்கு ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் இருந்து தொடர்ந்து இங்கு எழுதிவரும் எழுத்தாளர்களான மா.இராமையா, ஆர். சண்முகம், ரெ. கார்த்திகேசு, சை. பீர் முகம்மது, கோலலங்காட் அ. ரெங்கசாமி, நா. ஆ. செங்குட்டுவன், மு. அன்புச்செல்வன், டாக்டர் சி.சொக்கலிங்கம், பாவை போன்றோர் இக்காலப்பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. எழுத்தாற்றல் நிரம்பிய அவர்களின் அந்நாவல் படைப்புகள் பல்வேறு சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் கொண்டு விளங்கி, மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்திற்கு வளத்தைச் சேர்த்துள்ளன.

இவர்களுள் பேராசிரியர் ரெ. கார்த்திகேசு தொன்னூறுகளுக்குப்பின் பதிநான்கு நாவல்கள், குறுநாவல்களைப் படைத்து அதிகமான படைப்புகளைத் தந்தவர் என்ற சிறப்புக்கும் புகழுக்கும் உரியவர் ஆகின்றார். அவை கொப்புளங்கள் (1991/92), ராகதேவதை (1991) மனசுக்குள் கட்டுகிற மணற்கோபுரங்கள் (1991), தேடியிருக்கும் தருணங்கள் (1993), அம்மாவும் சாமியாரும் (1994), சாரங்கன் வருகிறான் (1995), அந்திம காலம் (1998), நாளைக்கு (1999), காதலினால் அல்ல (1999), நல்லவராவதும் தீயவராவதும் (2002), தீக்காற்று (2003,) புழுத்துளைகள் (2004), சூதாட்டம் ஆடும் காலம் (2005), சேர்ந்து வாழலாம் வா! (2005) ஆகியன. இவர் தொன்னூறுகளுக்கு முன்பே நாவல் எழுதத் தொடங்கி விட்டாலும் தொன்னூறுகளிலிருந்து இன்றுவரை மேலும் பல நாவல்களைப் படைத்து மலேசியத் தமிழ்கூறு நல்லுலகிற்கு வளம் சேர்த்துள்ளார். மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுள் மாறுபட்டு விளங்கும் எழுத்தாளராக இவரைக் கூறலாம். ஏனெனில், இவர் சார்ந்திருந்த பல்கலைக்கழக பேராசிரியப் பணி, வெளிநாட்டுத் தொடர்புகள், பயணங்கள், பன்மொழியறிவு, தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம், இணையத்து வலைப்பக்கங்களில் சென்று உலக அளவில் எழுத்தாளர், வாசகர், இலக்கிய ஆர்வலர், திறானாய்வாளர் ஆகியோருடன் கொள்ளும் இலக்கியத் தொடர்புகள் ஆகியன அவருடைய அறிவை விசாலப்படுத்தி, அனுபவ வட்டத்தையும் விரிவடையச் செய்துள்ளது.

இது மற்ற எழுத்தாளர்களுக்குக் கிட்டாத வாயப்பும் வசதியும் ஆகும். அவருடைய தேடியிருக்கும் தருணங்கள் எனும் நாவலுக்குப் பிறகே மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி மறுமலர்ச்சி கண்டது எனில் மிகையில்லை. இந்நாவல் குறித்து இக்கட்டுரையில் தனியாக விளக்கப்படுவதால் அந்நாவலைப் பற்றிய கூடுதல் விவரங்கள் கீழே தனித்தலைப்பில் தரப்படுகின்றன. இந்நாவல் வெளியான சில ஆண்டுகளில் இவர் பதவி

ஓய்வுபெற்றதனால், அதன் பின்னர் முழுநேர எழுத்தாளரானது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவருடைய புழுத்துளைகள் எனும் குறுநாவல் முழுக்க முழுக்க அறிவியல் பார்வையில் அறிவியலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அறிவியலை மையமாகக் கொண்ட முதல் மலேசியக் குறுநாவல் என இந்நாவலைக் கருதுவதிலும் மலேசியாவில் தமிழில் அறிவியல் நாவலின் முன்னோடியாக இவரைக் கொள்வதிலுத் தவறிருக்க முடியாது. தொன்னூறுகளிலும் புத்தாயிரத்திலும் சிறுகதைகள், தொடர்-கதைகள், ஆய்வுக்கட்டுரைகள், கருத்துக் கடிதங்கள் எனப் பலவற்றை அவர் எழுதுவதும் அவை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவருவதும் காணக் கூடியதாயுள்ளது. இவற்றுள் இவருடைய நாவல் எழுதும் முயற்சிகள் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்திற்குச் சிறப்பையும் வளத்தையும் சேர்த்துள்ளன. எனவே, இவரை மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் மறுமலர்ச்சி பெறுவதற்குத் துணைபுரிந்த முன்னோடியாகக் கொள்வதில் தவறிருக்க முடியாது. மேலும், இக்காலப் பகுதியில் இவர் பிற எழுத்தாளர்களையும் நாவல் எழுதத் தூண்டி வழிகாட்டியுள்ளதோடு அவர்களின் நாவல்கள் நூல்வடிவில் வெளிவரவும் 'முகில் எண்டர்பிரைஸ்' நிறுவனத்தின் மூலம் உதவி வருகிறார். எனவே, இவருடைய முயற்சிகள் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தரத்திலும் எண்ணிக்கையிலும் உயர்வதற்குத் துணைபுரிந்துள்ளது.

அடுத்து, நா.ஆ.செங்குட்டுவன் தொன்னூறுகளிலிருந்து இன்றுவரை ஆறு நாவல்களை அச்சில் கொண்டுவந்து எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் உள்ளார். அவை நெருப்புக் கொடிகள் (1998), விடியலுக்காக (1998), விலங்கு (1998), துன்பங்கள் உறங்கு-வதில்லை, (2001) கனவுப்பந்தல் (2005), கால்களே நில்லுங்கள் (2005) ஆகியன. நீண்டகாலமாக மலேசியத் தமிழ் இலக்கிய உலகோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களுள் ஒருவர் இவர். கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை எனப் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு சளைக்காமல் இன்றும் எழுதி வரும் எழுத்தாளர். இவருடைய பல நாவல்களுள் பல பத்திரிகைகளில் வெளிவந்தவை ஆகும். அவை பத்திரிகைகளிலேயே இருந்து மடிந்தும் முடங்கியும் போய்விடக் கூடாது என்ற நோக்கத்தில் அவற்றிற்கு நூலுருவம் கொடுத்தே தீரவேண்டும் என்பதில் உறுதியுடனிருந்து செயல்படும் எழுத்தாளர் ஆவார்.

மூத்த எழுத்தாளர்களுள் தனித்தன்மை வாய்ந்த மற்றொரு எழுத்தாளர் கோலலங்காட் அ.ரெங்கசாமி. தொன்னூறுகளுக்குப்பின் இவர் எழுதிய நாவல்கள் நான்கு. அவை புதியதோர் உலகம் (1993), நினைவுச்சின்னம் (2005), லங்காட் நதிக்கரை (2006), இமயத்தியாகம் (2007) ஆகியன. இந்நான்கும் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் இதுநாள் வரையில் பதிவு செய்யப்படாத மலேசியத் தமிழினத்தின் பழைய வரலாற்றுச் சுவடுகளைப் பதிவு செய்துள்ளன. இந்நாவல்களில் மலேசிய இந்தியர்களின் உண்மை வரலாறும் அவலவரலாறும் கதையாக்கப்பட்டுள்ளன. இவருடைய நாவல்களின் சிறப்புக்கும் வெற்றிக்கும் இவர் பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்ட கள ஆய்வும் அவை தொடர்புடைய மனிதர்களிடம் நடத்திய சந்திப்புகளும் காரணங்கள் ஆகும். அவற்றுக்கான ஆதாரங்களை அந்தந்த நாவல்களில் பின்னிணைப்புகளாக இணைத்துள்ளார். இந்நான்கு நாவல்களுக்கும் காலப்பின்னணி இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகள் ஆகும். நாற்பதுகளில் இரண்டாம் உலகப்போர், ஜப்பானியர் ஆட்சி (1942-45), போருக்குப்பின் கம்யூனிசத் தீவிரவாதிகளின் கலகங்களும் நாசவேலைகளும் ஆகிய சூழல்களின்போது நடைபெற்ற கதையை இந்நாவல்களில் காட்டியுள்ளார். களப்பின்னணி மலேசியத் தோட்டப்புறங்களும் கிராமங்களும் சயாம் மரணரயில் அமைந்துள்ள இடங்களும் ஆகும். மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் இவற்றைப் பதிவுசெய்து வைப்பதில் இவர் வெற்றிபெற்று சிறந்து விளங்குகின்றார். புதியதோர் உலகம் எனும் நாவலில் ஜப்பானியர் ஆட்சியில் தோட்டப்புறத்தில் ஆண்மக்களெல்லாம் மரணரயில் பாதை அமைக்க சயாம் சென்றுவிட்டநிலையில் தோட்டப்புறங்களில் பெண்மக்கள் ஆண்துணையின்றிக் குழந்தைகளையும் முதியவர்களையும் கவனிக்கப்பட்ட அவலவாழ்க்கை நாவல் முழுக்கக் காட்டப்பட்டுள்ளது. நினைவுச்சின்னம் எனும் நாவலில் மரண ரயில்பாதை அமைக்க ஜப்பானியர்கள் சயாமுக்குத் தமிழர்களைக் கால்நடைகளைப்போல அடைத்துவைத்து ஓட்டிச் சென்ற அனுபவங்களும் சயாமில் வேலைக்கொடுமையாலும் முறையான உணவு, மருந்து, உடை, உறையுள் ஆகியன கிடைக்காத நிலையினாலும் கொத்துக்கொத்தாய் ஆயிரக்கணக்கில் மனிதர்களைக் குற்றுயிரும் குலையுயிருமாய்ப் புதைகுழியில் தள்ளிப்புதைத்த ஜப்பானியரின் கொடுங்கோன்மை ஆட்சிமுறை நாவல் நெடுகக் காட்டப்பட்டுள்ளது. லங்காட் நதிக்கரை எனும் நாவலில் அன்றைய மலாயாவில் ஜப்பானியரின் கொடுங்கோலாட்சி ஒருமுடிவுக்குவர, ஜப்பானியர் ஆட்சியை விட்டு நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் முந்தைய ஆட்சியாளர் ஆங்கிலேயர் நாட்டுக்கு இன்னும் திரும்பாத நிலையில் சுமார் இரண்டு வார காலம் மலாயா மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப் படையிலிருந்த (MPAJA - Malayan Peoples Anti Japanese Army) கம்யூனிஸ தீவிரவாதிகள் இந்நாட்டை ஒரு கம்யூனிஸ நாடாக மாற்றும் திட்டத்தில் அராஜக ஆட்சி நடத்தி மக்களை ஆட்டிப்படைத்தனர். ஆங்கிலேயர் நாடுதிரும்பிய பின்னரும் கம்யூனிஸ்டுத் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் காடுகளுக்குத் தப்பியோடி தங்கள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். அதனையொட்டி இந்நாட்டில் அவசரகாலம் (Emergency) பிரகடனமும் ஊரடங்குச் சட்டமும் (Curfew) அறிவிக்கப்பட்டது. அந்தச் சூழலில் தோட்டப்புறங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்த மலேசியத் தமிழர்கள் கம்யூனிஸ்டுகளிடம் சிக்கித் தவித்த அவலம் இந்நாவலில் கதையாக்கப்பட்டுள்ளது. இமயத் தியாகம் எனும் நாவல்

நேதாT சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை மையமாகக் கொண்டு புனையப்பட்ட நாவல் இது. இரண்டாம் உலகப்போரின் போது, நேதாஜி அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியாகி, முதலில் ஐரோப்பா சென்று பின் அங்கிருந்து நீர்மூழ்கிக் கப்பலின் வாயிலாக சிங்கைவந்து தற்காலிக இந்திய அரசு (Azad Hind) அமைத்தும் மலாயாவின் பல பகுதிகளுக்குச் சென்று மலாயா இந்தியர்களிடம் வீரவுரை ஆற்றி அவர்களுக்கு எழுச்சியூட்டி இந்தியநாட்டை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்கப் படையும் (Indian National Army) அமைத்து, பொருளும் திரட்டியது வரலாறு. இவற்றை மையமாகக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது.

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தை வளப்படுத்தியவர்களுள் மருத்துவத்துறையைச் சார்ந்த டாக்டர் சி.சொக்கலிங்கத்தின் பங்களிப்பும் கணிசமாகவே காணப்படுகின்றது. பெரும்பாலும் அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்தவர்கள் இலக்கியத்துறையை அவ்வளவாக விரும்புவதில்லை. அல்லது அத்துறைகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால், அதற்கு மாறுபட்ட எழுத்தாளராக இவர் விளங்குகின்றார். மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் கொண்ட ஈடுபாட்டினால் எழுத்துத்துறையில் நுழைந்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவருள் ஒருவராக இன்று காணப்படுகின்றார். தம் மருத்துவத்தொழிலோடு இலக்கியங்கள் படைப்பதனையும் கொள்கையாகக் கொண்டவர் இவர். தாம் சார்ந்துள்ள மருத்துவத்துறையில் கிடைத்த அனுபவங்களை நாவல்களில் காட்டியுள்ளார். அவ்வப்போது நடந்தேறும் இலக்கிய நிகழ்வுகளில் தவறாது கலந்துகொள்ளும் ஒருவராக உள்ளார். தொன்னூறுகளுக்குப்பின் இவர் மனவீணை (1990), பேசும் ஊமைகள் (1991), சுவர் (1997), மனித்தப்பிறவியும் (1995), சுவர் (1997) ஆகிய ஐந்து நாவல்களை எழுதியுள்ளார். இவை யாவும் இவர் கதை எழுதிய காலத்தில் தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கிய சமூகப் பிரச்சினைகளைப் பேசுகின்றன. மனவீணை எனும் நாவல் தமிழக, மலேசியப் பின்னணியில் நடக்கும் கதையைக் கொண்டுள்ளது சந்தர்ப்பச் சூழ்நிலையால் இருபெண்களை மணக்க நேரிட்ட ஓர் ஆடவனின் கதையாக இது அமைக்கப்பட்டுள்ளது. இக்கதையில் வரும் கதிரவன் முதலில் இளநங்கை என்ற பெண்ணையும் இரண்டாவதாகக் மலர்விழி என்ற பெண்ணையும் மணந்து பல்வேறு போராட்டங்களுக்கு ஆளாகின்ற கதையே நாவலின் முழுவதும் காட்டப்பட்டுள்ளது. பேசும் ஊமைகள் எனும் நாவல் கலைகளைப்பற்றியும் கலைஞர்களைப்பற்றியும் விளக்கும் வகையில் கதை அமைக்கப்பட்டுள்ளது. காமம் கடந்தநிலையில் தெய்வீகக் காதலாய் மலரும் மங்கை எனும் பெண்ணின் கதையைக் கொண்டது மனித்தப்பிறவியும் எனும் நாவல். சுவர் எனும் நாவலில் தமிழ் இளைஞர்களின் மத்தியில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினையான போதைப்பொருள் பழக்கத்தைக் கதையாக்கிக் காட்டியுள்ளார். பல்வேறு காரணங்களுக்காக இன்றைய இளைஞர்கள் விட்டில்பூச்சிகளைப் போன்று போதைப்பொருளை நாடிச்சென்று அழிந்துபோகின்றனர். அவற்றுள் ஒன்றாகப் பெற்றோரின் அக்கறையற்ற போக்கினாலும் அன்பற்ற நிலையினாலும் இந்நிலை ஏற்படுவதாக இந்நாவலில் ஆசிரியர் காட்டிப் போகிறார். இக்கதையில் வரும் மிகவும் கெட்டிக்கார மாணவனான கார்த்திகேயன் எனும் படிவம் ஆறு மாணவன் தன் தந்தை பூங்குன்றனின் அன்பிற்கு ஏங்கி, அது கிடைக்காதநிலையில் போதைப்பொருளில் மிதந்து வாழ்க்கையையே முடித்துக்கொண்ட சோகம் கதையில் காட்டப்பட்டுள்ளது.

மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர் தங்காக் மா. இராமையா. ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டிலே விடாமல் எழுதிவரும் முதன்மையான எழுத்தாளர் இவர். மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றோடு தம்மைப் பிணைத்துக் கொண்டவர்களுள் முக்கியமானவர். இவருடைய நாவல் எழுதும் பணி அறுபதுகளிலேயே தொடங்கி விட்டாலும் தொன்னூறுகளிலும் அழகின் ஆராதனை (1992), சுவடுகள் (1994), சங்கமம் (1995) விழலும் நீரும் (1999) ஆகிய தலைப்புகளில் நான்கு நாவல்களை வெளியிட்டுள்ளார். அழகின் ஆராதனை எனும் தமிழகத்தின் சங்கொலி இதழில் தொடராக வந்தது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்நாவலில் புற அழகைவிட அக அழகே வாழ்க்கைக்குத் தேவையானது என்பதனையும் இன்றைய இளைஞர்கள் வெறும் புற அழகில் மயங்கித் தங்களின் வாழ்க்கையையே சீரழித்துக் கொள்கின்றனர் என்பதனையும் இந்நாவலில் வரும் லதா, ரகு (காதலர்கள்) என்கிற கதைமாந்தர்கள் மூலம் காட்டியுள்ளார். சுவடுகள் எனும் நாவல் தமிழ் மலர் பத்திரிகையில் எழுபதுகளில் தொடராக வந்தபோது புரியாத பாதையில் அழியாத சுவடுகள் எனும் நீண்ட தலைப்பில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்நாவல் தோட்டப்புறப் பின்னணியை மையமாகக் கொண்டு கதை எழுதப்பட்டுள்ளது. தோட்டப்புறச் சூழலில் போதைப்பொருள் பழக்கம் இளைஞர்களைப் பற்றிக்கொள்ளும்போது ஏற்படும் விபரீதங்களும் அவலங்களும் இக்கதையில் காட்டப்பட்டுள்ளன. இக்கதையில் வரும் வேலு போதைப்பொருளுக்கு அடிமையாகிச் சீரழியும்போக்கு இந்நாவலில் இயல்பாக ஆசிரியரால் காட்டப்பட்டுள்ளது. தோட்டப்புறத்தை விட்டு புதுவாழ்வு தேடி, பட்டணப் பிரவேசம் செய்யும் ஓர் இளைஞனான குணாளன் நகர்ப்புறத்தில் எதிர்கொள்ளும் போராட்டங்களைக் காட்டும் கதையைக்காட்டும் நாவல் சங்கமம். பொதுவாக மலேசியத் தமிழ் நாவல்களில் பிற இனக் கதைமாந்தர்கள் வருவது மிகமிகக் குறைவு. அக்குறையைப் போக்குவதுபோல அமைந்துள்ள இந்நாவலில் பிற இனக் கதைமாந்தர்கள் பரவலாகக் கதையில் இடம் பெறுவதும் கதையில் முக்கியப்பாத்திரங்களை ஏற்பதும் இந்நாவலில் சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. படித்த பெண்களைப் பணம் கறக்கும் இயந்திரமாகக் கருதும் ஆண்களைக் காட்டும் நாவல் விழலும் நீரும். இக்கதையில் வரும் குமாரவேலு ஒரு பட்டதாரிப் பெண்ணான

கயல்விழியைப் பணத்திற்காக மணந்து தன் தாய் கன்னியம்மாவுடன் சேர்ந்து படுத்தும்பாடுதான் நாவலில் கதையாக விரிந்துள்ளது.

### 5.6.3 தேடியிருக்கும் தருணங்கள் நாவலுக்கான கருத்தரங்கு (1993)

மலேசியத் தமிழ் நாவல் வளர்ச்சியில் நடந்தேறிய மற்றொரு முக்கிய நிகழ்வு 1993-இல் பேராசிரியர் ரெ.கார்த்திகேசு எழுதி வெளியிட்ட நாவலான தேடியிருக்கும் தருணங்கள் எனும் நாவலுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் கருத்தரங்காகும். இக்கருத்தரங்கு மலேசியத் தலைநகர் கோலாலும்பூர் முத்தமிழ்ப் படிப்பகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கருத்தரங்கின் சிறப்பு யாதெனில் மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் முதன்முறையாக நாவலொன்று வெளிவந்த கையோடு அதனைப்பற்றி அறிந்துகொள்ள கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது ஆகும். இக்கருத்தரங்கில் இந்நாவலைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் படைப்புகளோடு கருத்துப்பரிமாற்றம், கலந்துரை-யாடல் ஆகியனவும் இடம்பெற்றன. இக்கருத்தரங்கின்போது கடுமையான விவாதங்களும் காரசாரமான கருத்துப்பரிமாற்றங்களும் நடைபெற்றதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளரும் திறனாய்வு அடிப்படையில் தேடியிருக்கும் தருணங்கள் நாவல் - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் கட்டுரை வாசித்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது. அக்கட்டுரையில் “மலேசியத் தமிழ் நாவல் வரலாற்றில் தொன்னூறுகளின் முற்பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்திய சிறப்பிற்குரிய நாவலாக இந்நாவல் அமைந்துள்ளது. கதை சொல்கின்ற அழுத்தத்தில், வேகத்தில் இதுகாறும் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் யாரும் எட்டியிராத ஆழத்தை இந்நாவல் அடைந்துள்ளதே புதுமைக்குரிய ஒன்றாகவே விளங்குகின்றது. கதையைச் சுவையாகவும் ஆர்வநிலையோடும் வாசகர்களைப் படிக்கத் தூண்டிய நாவல் இது. உள்ளடக்கக் கட்டமைப்பு, உத்திகளின் பயன்பாடு, கலைத்திறன் ஆகியவற்றால் சிறந்தமைந்து மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெறத்தக்க ஒரு நல்ல நாவலாக இந்நாவல் திகழுகின்றது” என்று கூறும் கூற்றே இந்நாவலின் சிறப்பை உணர்த்தப் போதுமானது.(9)

இதனால் இந்நாவல் இதுவரையில் எந்த மலேசியத் தமிழ் நாவலும் பெற்றிராத அளவுக்கு வாசகர் மத்தியில் பரவலாகவும் பரபரப்பாகவும் அப்போது பேசப்பட்டது. இந்நாவலில் வரும் சூர்யா என்பவனின் விமானப் பயணத்தில் தொடங்கும் நாவலின் கதை மீண்டும் அவனுடைய விமானப்பயணத்திலேயே முடிவடைகின்றது. நாவலின் கதை முழுக்க முழுக்க சூர்யாவையே மையம் கொண்டு அவன் விழிவழியாகக் (point of view) கூறப்பட்டுள்ளது. நாவலின் கதைநிகழ்ச்சிகளின் அமைப்பில் ஒரு சிறுகதைக்குரிய அமைப்பான ஓர்மைப் பண்பே காணப்படுகின்றது. அந்த ஓர்மையைக் கட்டிக்காப்பதைப் போல வலுப்படுத்துவதைப் போல கதை விமானத்திலேயே தொடங்கி விமானத்திலேயே முடிவடைகின்றது. நாவலின் இறுதிவரை கதைச்சுவை குன்றாது வாசகர்களை ஆர்வநிலையோடு படிக்கத் தூண்டிய நாவலாக இது அமைந்திருந்தது. “என்னைச் சுற்றி ஒரு மர்மச் சுவரைக் கட்டிவிட்டு அதில் இவன் எப்படி-யெல்லாம் தத்தளிக்கப் போகிறான் என வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா?”(10) என சூர்யா நினைப்பது போலவேதான் நாவலில் கதை அமைக்கப்பட்டுள்ளது. இந்நாவலுக்குக் கிடைத்த வரவேற்பானது சோர்ந்து காணப்பட்ட மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் பலருக்கும் ஊக்கம் தருவதாய் அமைந்தது. இக்கருத்தரங்கு தந்த உந்துதலின் விளைவாகப் பலர் நாவல் எழுதமுனைந்ததும் பின் அவற்றை வெளியிட்டதனையும் காணமுடிந்தது. ஆக, தொன்னூறுகளில் நாவல்களின் எண்ணிக்கை உயர்வுக்கு இந்நாவலுக்காக நடத்தப்பட்ட கருத்தரங்கும் ஒரு காரணம் எனில் மிகையில்லை.

### 5.6.4 1992-ஆம் ஆண்டின் சிறந்த குறுநாவல்

தொன்னூறுகளில் குறிப்பாக 1992-இல் எம். துரைராஜ் அவர்கள் நடத்திய இதயம் இதழில் தொடராக வெளிவந்த கொப்புளங்கள் எனும் தலைப்பிலான குறுநாவல் அவ்வாண்டின் சிறந்த குறுநாவல் வீ. செல்வராஜ் அவர்களால் அடையாளங்காணப்பட்டு அவரது ஆண்டுத்தொகுப்பான மலேசியத் தமிழ் இலக்கியம் 1992 எனும் நூலில் இணைக்கப்பட்டுள்ளது. இக்குறுநாவல் பேராசிரியர் ரெ. கார்த்திகேசுவின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான மனசுக்குள் (1995) என்ற தொகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. சமூகச் சீர்கேட்டைக் கதைப்பொருளாகக் கொண்ட படைப்பான இதில் சமூகத்தில் குழந்தை வளர்ப்பில் காணப்படும் செல்லரித்துப்போன ஒரு போக்கொன்று காட்டப்படுகின்றது. நம்மவர்கள் குழந்தை வளர்ப்பில் கடைபிடிக்கும் மிகையான கண்டிப்பு (சூடு போடுவது) ஏற்படுத்தும் பின்விளைவுகளை நடப்பியல் பாங்கில் இப்படைப்பு விளக்குகின்றது. “இவன எப்படித் திருத்தறது. இது ஒன்னுதான் எனக்குத் தெரிஞ்ச வழி! எங்கப்பா எனக்கு எத்தனை சூடு போட்டு வளத்தாரு தெரியுமா?”(11) என இக்கதையில்வரும் ரவீந்திரன் தன் மனைவியைப் பார்த்து இயல்பாகக் கூறுவது பிள்ளைகள் வளர்ப்பில் நம்மவர்கள் காலம் கடந்த சிந்தனைகளைக் கொண்டிருப்பதும் பிள்ளைகள் வளர்ப்பில் காலத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பதும் காலவளர்ச்சியை அறியாமல் இருப்பதும் உணர்த்தப்படுகின்றது. இக்கதையில் வரும் ரவீந்திரன், பிரேமா தம்பதியினர் சமூகத்தில் படிப்பறிவு குறைந்த கணவன், மனைவி ஆகியோருக்குப் பிரதிநிதியாகவும் அவர்களின் மகன் ஆனந்தன் வளர்ப்புச் சரியாக இல்லாத

பிள்ளைக்குப் பிரதிநிதியாகவும் காட்டப்பட்டுக் கதைப்பொருளுக்கும் கருபொருளுக்கும் உயிர் கொடுத்துள்ளனர். மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் நடப்பியல் பாங்கில் சொல்லத் தொடங்கியுள்ளதற்கு இக்குறுநாவல் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

### 5.6.5 மலேசியத் தமிழ்நாவலில் துப்பறியும் போக்கு

மர்மமும் அதனையொட்டிய துப்பறிதலும் தமிழ் நாவலுக்குப் புதிதல்ல. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாவல் உலகில் பரவலாகத் தமிழக நாவலாசிரியர்களால் கையாளப்பட்ட போக்குகள் அவை. அக்காலப்பகுதியில் (1900-1930) தமிழ் நாவல் உலகில் கொடிகட்டிப்பறந்த ஜாம்பவான்கள் என வருணிக்கப்பட்ட வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர்.ரங்கராஜீ ஆகியோர் இத்துறையை வேகமாக வளர்த்துவிட்டவர்கள் ஆவர். முப்பதுகளில் கல்கி ஆசிரியருக்குப்பிறகு தமிழ் நாவல் உலகம் நடப்பில் நெறிக்குத் திரும்பி விட்டதால் தமிழக நாவல்களில் துப்பறிதலும் மர்மப்பண்பும் ஏறத்தாழ மரித்துப்போன போக்காகவே போய்விட்டன. தொடக்ககால மலேசியத் தமிழ் நாவல்களிலும் ஓரளவிற்கு இப்போக்குகள் தமிழகத்தின் தாக்கங்களினால் காணப்பட்டன. தமிழகத்தைப் போலவே பின்னாளில் மலேசியாவிலும் அதன் செல்வாக்கு வழக்கிழந்து போனது. ஆனால், இப்போக்கு மலேசியத் தமிழ் நாவல்களில் அவ்வப்போது தலைநீட்டுவதைக் காண முடிகின்றது. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் ஓரிரு நாவல்களாவது மர்மம், துப்பறிதல் ஆகிய போக்குகளைக் கொண்டு அமைவதை ஆய்வாளர்கள் அறிவர். அவ்வகையில் தொன்னூறுகளில் வா! அருகில் வா! (1990) எனும் தொகுப்பில் வா! அருகில் வா!, நெஞ்சுக்குத் தெரியும் எனும் தலைப்புகளில் அமைந்துள்ள இரு வேறு குறுநாவல்கள் மர்மம், துப்பறிதல் ஆகிய போக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு குறுநாவல்களும் தினமணி பத்திரிகையில் தொடராக வெளிவந்தன. “மலேசிய மண்ணில் முதன்முதலாக தவழவிருக்கும் முதல் மர்மநாவல் என்ற பெருமைக்குரியவன் நான் என்பதைவிட, அதில் வாசகர்களுக்குத்-தான் அதிகம் பங்குண்டு என்பதில் எனக்கு இரட்டிப்பு மகிழச்சி” என்று தன்னுரையில் படைப்பாளர் கூறும் கூற்றில் அவரது மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் பற்றிய பிரக்ஞை எத்தகையது என்பதனைக் காட்டுவதாய் உள்ளது. தன்னைக் காதலித்துப் பின் கொன்றுவிட்ட காதலன் குமாரைக் காத்திருந்து பழிவாங்கும் ஆவிப்பெண் நித்யாவின் கதையைத் திகிலுடனும் விறுவிறுப்புடனும் கூறும் படைப்பு வா! அருகில் வா!. நெஞ்சுக்குத் தெரியும் எனும் குறுநாவலிலும் ஏறத்தாழ ஓரே கதையமைப்பே காணப்படுகின்றது. தயாளனால் காதலித்துக் கைவிடப்பட்ட பெண் சுமதி அவனைத்தேடும் முயற்சியின்போது விபத்தில் இறந்து ஆவியாகக் காதலனைச் சுற்றி வர, விவரமறிந்து அவனும் தன்னையறியாமல் மாடியிலிருந்து விழுந்து இறந்துபோகும் கதை திகிலுடன் காட்டப்பட்டுள்ளது. இவ்விரு குறுநாவல்களிலுமே ஆவிக்கதைமாந்தர் வருவதாகக் காட்டப்படுவது நாவல் இலக்கியத்தின் நடப்பியல் தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாய் உள்ளது.

### 5.6.6 மலேசியத் தமிழ்நாவலில் புதியபோக்கு

தொன்னூறுகளில் மலேசியத் தமிழ்நாவல்களில் பெண்களின் பிரச்சினைகளை மாறுபட்ட கோணத்தில் அணுகப்பட்டு பார்க்கப்படும் நிலை உருவானது. அவ்வகையில் பெண்பிரச்சினையைத் துணிச்சலாக மாறுபட்ட கோணத்தில் அணுகிய முதல் மலேசியத் தமிழ் நாவலாக சை.பீர் முகம்மதுவின் பெண்குதிரையைக் (1997) குறிப்பிடலாம். பரவலாகவும் தீவீரமாகவும் பெண்ணியம் பேசப்படும் இந்நாளில் அதனைத் தொட்டுப்பேசி பெண்ணியத்தைப் பற்றி வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டிய முதல் மலேசியத் தமிழ் நாவல் இது. இந்நாவல் மலேசிய நண்பன் பத்திரிகையில் தொடராகவந்து பின் நூலுருவம் பெற்றது. தொடராக வந்தபோதே வாசகர் மத்தியில் சலசலப்பையும் சச்சரவையும் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. முரண்பட்ட போக்குகள் உடைய பெண்களிருவரை இந்நாவலில் படைத்து அவர்களின் வாயிலாகப் பெண்ணின் பலத்தையும் பலவீனத்தையும் அடையாளங்கண்டு வெளிப்படுத்திய நாவலாக இது அமைகின்றது. இன்றைய நிலையில் மாற்றங்கண்டு வரும் இந்தியப் பெண்களின் நிலையைப் பற்றியும் மேலைநாடுகளில் தோன்றி வளர்ந்து வந்துள்ள தீவீரவாதப் பெண்ணியச் சிந்தனைகள் இந்திய, தமிழ்ப் பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் விளைவையும் இந்நாவல் வெளிப்படுத்த முயன்றுள்ளது. மேற்கத்திய நாகரிகத்தில் பெண்கள் மத்தியில் காணப்படும் ‘லெஸ்பியன்' உறவில் இந்நாவலின் கதைத்தலைவி கமலவேணி ஈடுபடுவதாக நாவலாசிரியர் காட்டுவதானது மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்குப் புதிய போக்காக உள்ளது. “முதலில் பெண்மை என்று குறிக்கப்-பட்டிருக்கும் வரையறைகளை மீறவேண்டும். இந்த மீறுதல் ஒன்றுதான் விடுதலைக்கு வழி. முதலில் எங்களைப் பாருங்கள். நாங்கள் தொழிலால் வெவ்வேறு தளங்களில் இயங்குகிறோம். ஆனால், ஏற்றத்தாழ்வுகள் இல்லை. நாங்கள் மூவரும் ஒரே குடும்பமாக வாழ்கிறோம். ஐ மீன் கணவன் மனைவி போல வாழ்கிறோம். வீ ஆர் லெஸ்பியன்ஸ் அதாவது ஓரினக் காதலர்கள். இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. பெண்கள் விடுதலை பெற முதலில் ஆண் சேர்க்கையிலிருந்து விடுபட வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை”(12) என இக்கதையில் வரும் மார்கிரெட் கூறுவது தீவீரவாதப் பெண்ணியமாகக் காணப்படுவதுடன் மலேசியத் தமிழ் வாசகர்களுக்குப் புதியதாகவும் உள்ளது. அதனைக்

காட்டியுள்ள நாவலாசிரியரின் துணிச்சல் வியக்கும் வகையில் உள்ளது. இந்நாவலுக்குப்பின் பெண்ணியம் பற்றிப் பரவலாகவும் விரிவாகவும் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்தில் பேசுதற்கு வழிவகுத்துத் தந்த முன்னோடி முயற்சியாக இந்நாவல் அமைகின்றது.

### 5.6.7 'சம்ப்பா - நரேந்தர்' குறுநாவல் போட்டி (1999)

தொன்னூறுகளின் இறுதியில், செப்டம்பர் 1999-இல் பேராசிரியர் ரெ.கார்த்திகேசுவின் நாளைக்கு எனும் தலைப்பிலமைந்த குறுநாவல் தமிழகத்தில் நடத்தப்பட்ட 'சம்ப்பா-நரேந்தர்' குறுநாவல் எழுதும் போட்டியில் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.(13) தமிழகத்தில் நடத்தப்பட்ட குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற முதல் மலேசியத் தமிழ்ப்படைப்பு என்ற சிறப்பினை இக்குறுநாவல் பெற்றுள்ளது. 1976-இல் ராணிமுத்து என்ற தமிழக இதழில் வெளிவந்த மா.இராமையாவின் எதிர்வீடு எனும் நாவலுக்குப்பிறகு கணையாழி இதழில் (செப்டம்பர், 1999) வெளிவந்து தமிழக வாசகர்களால் அறியப்பட்ட நாவல் இது. பெண்ணியப் பார்வை கொண்டு எழுதப்பட்ட நாவலாக இது அமைகின்றது. நிகழ்காலத்தில் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு மூலையில் முடங்கிவிட மாட்டார்கள்; அவன் கணவனாகவே இருந்தாலும் எதிர்க்கத் துணிவர் என்ற நிகழ்காலத்து நடப்பியல் உண்மையை ராஜேஸ்வரி (ராஜி), பத்மா ஆகிய இரு சகோதரிகளின் வாயிலாகக் காட்டியுள்ளார் கதாசிரியர். "இதோ பாருங்க! கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க! அவளுக்கு வேற யார் இருக்கா? எங்க போவா? வேற வழியே இல்ல! என்றாள். வேற வழி இல்லியா? நீ இந்த வீட்ட விட்டு வெளியே போய் அவளோட குடும்பம் நடத்து. நீ அவளோட தொடர்பு வச்சிக்கறதுன்னா நம்ம உறவு அறுந்து போகும். நானும் நீயும் கணவன்-மனைவி இல்ல! கோப்பையைக் கீழே வைத்தாள். சரி என்றாள். சேகரன் அதிர்ந்தான். என்ன சரி?... அதான் ஒவ்வொரு முறையும் உறவு அறுந்துபோகும்னு மிரட்டிக்கிட்டே இருக்கிங்கள! அவ்வளவு சுலபமா அறுத்துட முடியும்னா அறுத்துக்கத் தயார்! என் தங்கச்சிய நானே தனியா வச்சிக் காப்பத்தறேன்.... சம்பாரிக்கிறோம்கிற திமிரா என்றான் சேகரன். ஏன் இருக்கக்கூடாது? உங்களுக்குச் சமமாபாரிக்கிற திமிர் இருக்கும்போது உங்களுக்குச் சமமா சம்பாதிக்கிற எனக்கு இருக்கக் கூடாதா?. அப்ப வீட்டவிட்டு வெளியே போயிடுவ? ஆமா என்றாள். அப்ப புள்ளைங்க? உங்க இஷ்டம். நீங்களே வச்சிக்கலாம். வேண்டாம்ன்னா என்னோட அனுப்பலாம்"(14) எனவரும் உரையாடற்பகுதி இன்றைய சூழலில் கணவன், மனைவி உறவுமுறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைக் காட்டுவதோடு மிதவாதப் பெண்ணியத்தையும் காட்டுவதாக உள்ளது. தொன்னூறுகளில் பெண்ணியச் சிந்தனைகள் கொண்ட படைப்புகளுக்கு இக்குறுநாவலும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு அயலகத்தில் நல்ல மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தித் தந்த படைப்பு இது.

## 6. புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம்

இப்புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ்நாவல் இலக்கியம் நல்ல வளர்ச்சிகண்டு தரத்திலும் எண்ணிக்கையிலும் உயர்வு கண்டுள்ளது. இப்புத்தாயிரத்திலும் மூத்த எழுத்தாளர்களே தொடர்ந்து நாவல் எழுதும் முயற்சியில் தீவீரம் காட்டியுள்ளனர். அவ்வகையில் மா. இராமையா, கோலலங்காட் அ.ரெங்கசாமி, நா. ஆ. செங்குட்டுவன், ப.சந்திரகாந்தம், பேராசிரியர் ரெ. கார்த்திகேசு போன்றோர் நாவல் எழுதி வருகின்றனர்.

### 6.1 பத்திரிகைத் தொடர்களும் நூலாக்க முயற்சிகளும்

இப்புத்தாயிரத்தில் நாவலாசிரியர்கள் பத்திரிகைகளில் தொடர்கதை எழுதுவதில் அதிக ஈடுபாடு காட்டி வருவதனைக் காணமுடிகின்றது. ப. சந்திரகாந்தம் அமுதசுரபிகள் (மலேசிய நண்பன் - 2001), ஆளப்பிறந்த மருதுமைந்தன் (தமிழ் நேசன் - 2001), நா. ஆ. செங்குட்டுவன் கனவுப்பந்தல் (மலேசிய நண்பன் - 2001), பேராசிரியர் ரெ. கார்த்திகேசு சூதாட்டம் ஆடும் காலம் (மலேசிய நண்பன் - 2004) அ. சந்திரசேகரன் நீர்நிலைகள் (மலேசிய நண்பன் - 2005) கல்யாணி மணியம் வஞ்சிக்கோட்டை (மலேசிய நண்பன்) முதலான தொடர்களை எழுதியுள்ளனர். இத்தொடர்களுள் அமுதசுரபிகள், சூதாட்டம் ஆடும் காலம் ஆகியவை மட்டுமே பின்னர் நூலுருவம் பெற்றுள்ளன.

கடந்த காலங்களில் பத்திரிகைகளில் எழுதிய தொடர்களை இப்புத்தாயிரத்தில் படைப்பாளர்கள் நூலுருவில் கொண்டு வந்துள்ள-தனையும் காணமுடிகின்றது. அவ்வகையில் நா.ஆ.செங்குட்டுவன் துன்பங்கள் உறங்குவதில்லை (தமிழ் முரசு - 1970), கால்களே நில்லுங்கள் (தமிழ் மலர் - 1973), கோலலங்காட் அ.ரெங்கசாமி நினைவுச்சின்னம் (மயில் வார இதழ் - 1993) ஆகிய தொடர்கள் இப்புத்தாயிரத்தில் நூலுருவில் கொண்டு வரப்பட்டுள்ளன.

### 6.2 சிறுகதையாசிரியர்களின் பங்களிப்பு

நீண்டகாலமாகச் சிறுகதை எழுதிவருகின்றவர்கள் இப்புத்தாயிரத்தில் நாவல் துறையில் நுழைந்து தங்களின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டி தங்களாலும் நாவல் படைக்கமுடியும் என நிலைநிறுத்திக் கொண்டதனைக்

காண முடிகின்றது. அவர்களுள் நிர்மலா பெருமாள், கல்யாணி மணியம், சின்னருணா ஆகியோர் சிறப்பாக நினைவு கூரத்தக்கவர்கள் ஆவர். மலேசியத் தமிழ்நாவல்துறையில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகவும் அருகியே காணப்படும் குறையை ஓரளவுக்குப் போக்கும் வண்ணம் நிர்மலா பெருமாள், கல்யாணி மணியம் ஆகியோரின் நாவல் எழுதும் முயற்சிகள் இப்புத்தாயிரத்தின் தொடக்கத்தில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இப்புத்தாயிரம் தொடங்கி இதுவரையில் இவ்விரு பெண்படைப்பாளர்களின் நாவல் முயற்சிகளைத் தவிர வேறு பெண்படைப்பாளர்களின் நாவல் எழுதும் முயற்சிகள் எதனையும் மலேசியத் தமிழ் நாவல் உலகம் காணவில்லை. இவ்விருவருள் மலேசியத் தமிழ்ச்சிறுகதை உலகம் நன்கு அறிந்த எழுத்தாளரான நிர்மலா பெருமாள் குயில்கூவி துயில்எழுப்ப (2002), வேள்வி (2007) ஆகிய தலைப்புகளில் இருநாவல்களை எழுதி நூல்வடிவில் கொணர்ந்துள்ளார். அதேபோன்று சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கிய கல்யாணி மணியம் அவர்கள் வஞ்சிக்கோட்டை (2005) எனும் தலைப்பில் மலேசிய நண்பன் இதழில் வரலாற்றுத் தொடரொன்று எழுதி வாசகர்களின் மதிப்பையும் பாராட்டையும் பெற்றார். இவருடைய இத்தொடர் தமிழக வரலாற்றுப் பின்னணியில் குறிப்பாக மூவேந்தர்களுள் சேரமன்னரைப்பற்றியதாக அமைந்திருந்தது. ஆனால், இத்தொடர் இன்னும் நூலுரு பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாகச் சிறுகதைத் துறையில் உழன்றுகொண்டிருந்த சின்னருணா வசந்தமே உன்னைத் தேடுகிறேன் எனும் சமூகத்தொடர்கதையொன்றை (மலேசிய நண்பன் - 2005) எழுதியிருந்ததனைக் காணமுடிகின்றது. இத்தொடரும் இன்னும் நூலுருவம் பெறாமலே உள்ளது.

இப்புத்தாயிரத்தில் இளைய தலைமுறையினரும் நாவலைத் தொடராக எழுதும் முயற்சியில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில் கி.உதயகுமாரி எனும் இளைய தலைமுறை எழுத்தாளர் மலேசிய நண்பன் இதழில் உன்னால்தான் நானே வாழ்கிறேன் (2005) எனும் தலைப்பில் எட்டுவாரத் தொடரொன்று எழுதியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இத்தொடரும் இதுவரையில் நூலாகவில்லை.

### 6.3 நாவலாசிரியர்களும் கள ஆய்வும்

இப்புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்களின் கவனம் நாவல் படைப்பதில் உள்ள நுட்பங்களை அறிந்து அதனைச் சிறப்பாக மேற்கொண்டு நாவலை உயிரோட்டமுடனும் உண்மையின் சாயலிலும் எழுதுவதில் திரும்பியுள்ளதனைக் காணமுடிகின்றது. குறிப்பாக, நாவலில் கதையாக்க எடுத்துக்கொண்ட கதைப்பொருளை உள்ளவாறும் இயல்பாகவும் உண்மையின் சாயலிலும் வெளிப்படுத்திக் காட்டுவதற்குக் அக்கதைப்பொருளை நன்கறிந்து கொள்ள கள ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். விளக்குவதற்கு எடுத்துக்கொண்ட கதை நிகழ்ந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்றும் அதுதொடர்பான விரங்கள் அடங்கிய ஆவணங்களைப் பெற்றும் அதுபற்றி நன்கு தெரிந்த அல்லது நேரடி அனுபவம் உள்ளவர்களைச் சந்தித்து நேர்காணல் நடத்தியும் விவரங்களை முழுமையாகப் பெற்று நாவல்களைப் படைத்துள்ளநிலை இப்புத்தாயிரத்தில் வெளிவந்துள்ள சில நாவல்களைப் படிக்கும்போது அறியமுடிகின்றது. மலேசியத் தமிழ் நாவல்துறை நடப்பியல் பக்கம் திரும்பி நடைபோடத் தொடங்கிவிட்டதனை இது காட்டுவதாயுள்ளது. அவ்வகையில் கோலலங்காட் அ. ரெங்கசாமி, ப. சந்திரகாந்தம் ஆகிய இருவரும் இவ்வாறு உள்நாட்டில் கள ஆய்வில் ஈடுபட்டு நாவல்கள் படைத்து வெற்றியும் பாராட்டுகளும் பெற்றவர்கள் ஆவர். இவர்கள் கள ஆய்வில் திரட்டிய தரவுகள் நாவல்களுக்கு நடப்பியல் தன்மையையும் உண்மை உணர்வையும் தந்து நாவலைச் சமூகத்தின் சமகால வரலாறாக ஆக்கியுள்ளதனைக் காணமுடிகின்றது. ப.சந்திரகாந்தம், கல்யாணி மணியம் ஆகியோர் தமிழகத்து வரலாற்று ஆவணங்களில் உழன்று தமிழகப் பின்னணியில் வரலாற்று நாவல்கள் படைத்துப் பாராட்டுப் பெற்றனர்.

இவர்களுள் கோலலங்காட் அ. ரெங்கசாமி தொன்னூறு-களிலிருந்து தாம் எழுதிவரும் அத்தனை நாவல்களையும் கள ஆய்வில் ஈடுபட்டு வேண்டிய தரவுகளையும் விவரங்களையும்பெற்று நாவல்கள் எழுதிவருவது குறிப்பிடத்தக்க ஒன்று. புத்தாயிரத்தில் வெளிவந்துள்ள அவரது மூன்று நாவல்களான நினைவுச்சின்னம் (2005, லங்காட் நதிக்கரை (2006), இமயத்தியாகம் (2007) ஆகியன கள ஆய்வின்வழி விளைந்த நாவல்கள் ஆகும். இவை மேன்றும் இரண்டாம் உலகப்போருக்கு முன்னும் உலகப்போரின் போதும் உலகப்போருக்குப் பின்னும் அன்றைய மலாயாவின் அரசியல், சமூகப் பின்னணியில் நாவலாக அமைக்கப்பட்டுள்ளன. அப்போதைய அனைத்துலக, உள்நாட்டு அரசியல், சமூக உண்மை நிலவரங்களை அறிந்துகொள்ள தாம் கள ஆய்வில் ஈடுபட்டு, தரவுகளையும் விவரங்களையும் திரட்டி, அவற்றின் துணைகொண்டே இந்நாவல்களை எழுதியதாக இந்நாவல்களின் முன்னுரைகளில் குறிப்பிட்டுள்ளார். அவர் கள ஆய்வில் ஈடுபட்ட விவரங்களும் தகவல்கள் திட்டியதற்கான சந்திப்பு நடத்தி விவரங்கள் வழங்கியவர்கள் பற்றிய விவரங்களும் கதைச்சம்பவங்கள் நடந்தேறிய இடங்களைப் பற்றிய வரைபடங்களும் மேற்கோள் அடங்கிய நூற்பட்டியலும் பின்னிணைப்புகளாக அவரால் படைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இவருடைய லங்காட் நதிக்கரை எனும் நாவல் இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய மலாயாவில் காணபட்ட உண்மை நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள திறத்தால் 2004/2005 ஆண்டில் நடைபெற்ற நாவல் எழுதும் போட்டியின் சிறப்புப்பரிசான மலேசிய ரிங்கிட் பத்தாயிரத்தைப் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாவலாசிரியர் ப.சந்திரகாந்தம் இயல்பாகவே வரலாற்றுத்துறையில் மிகுந்த ஈடுபாடும் விருப்பமும் கொண்டவர். தமிழ் நேசன் நாளிதழில் மலேசிய இந்தியர்களின் கடந்தகால வாழ்க்கையைப்பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் பல வாரங்களுக்குத் தொடர்ந்து எழுதியவர் ஆவார். அதற்காக அவர் அரிதின் முயன்றுபெற்ற கள ஆய்வுச் செய்திகளையும் திரட்டிய தகவல்களையும் துணையாகக்கொண்டு இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளின் பின்னணியில் அமுதசுரபிகள் எனும் தலைப்பிலமைந்த வரலாற்றுப் பின்னணிகொண்ட நாவலைக் கலைத்தன்மையோடும் கட்டமைப்புடனும் சிறப்புடன் படைத்துள்ளார். இந்நாவல் மலேசிய நண்பன் நாளிதழில் 2001-ஆம் ஆண்டில் தொடராக எழுதி, பின் நூலுரு பெற்றது. தயாபரன் எனும் நாடகக் கலைஞனைப்பற்றிய கதையான இது காலனித்துவத் தமிழகத்தையும் மாலாயாவையும் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது. தமிழகத்திலும் மலாயாவிலும் முப்பதுகளில் நாடகக் கலையின் இடமும் நிலையும் எத்தகையது என்பதும் அரசியல், பொருளாதார நிலவரங்களும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்புகள் பல கொண்டிருந்த காரணத்தால் இந்நாவல் 2002 - 2006 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த மலேசியத் தமிழ் நாவல்களுள் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசான ரிங்கிட் மலேசியா ஏழாயிரத்தைப் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ் நேசன் இதழில் ஆளப்பிறந்த மருது மைந்தன் எனும் தமிழகப் பின்னணியில் அமைந்த தொடர் ஒன்றையும் 2001-இல் எழுதினார். தமிழகத்தில் ஐரோப்பியரின் வரவிற்குப்பின் குறிப்பாக பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிந்திய சூழலைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் செல்வாக்கு, தமிழகத்தில் வேகமாகப் பரவிவரும் சூழலில் சிவகங்கை சமஸ்தானத்தின் மருது பாண்டியர்களின் கடைசி வாரிசான துரைசாமியை மையப்படுத்தி தமிழகத்திலும் அன்றைய பினாங்கிலும் கதை நடப்பதாகக் காட்டப்-பட்டுள்ளது.

**6.4 மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தின் பொற்காலத் தொடக்கம்**

இப்புத்தாயிரத்தில் கடந்துவந்த சில ஆண்டுகளில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் அடைந்துவரும் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அது பொற்காலத்தின் தொடக்கப்படிகளில் இருந்து கொண்டிருக்கின்றது எனலாம். மலேசியத் தமிழ் இலக்கிய வகைகளிலேயே மிகவும் குறைவான வளர்ச்சியைப் பெற்ற இலக்கிய வடிவம் நாவல் இலக்கியமே. இவ்வுண்மையினை ஆய்வாளர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் நன்கறிவர். நாவல் இலக்கியத்தை இம்மலேசிய மண்ணில் நன்கு தழைக்கச்செய்ய விடுதலைக்குப்பின் அவ்வப்போது ஆர்வமுள்ள தரப்பினர் பலர் முயன்றுள்ளனர். அவ்வகையில் 1969, 1973, 1979, 1987, 1989 ஆகிய ஆண்டுகளில் நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் பத்திரிகை, சா. ஆ. அன்பானந்தன் இலக்கியப் பரிசு வாரியம் ஆகிய அமைப்புகள் இப்போட்டிகளை நடத்தின. எனினும், வளர்ச்சியில் மிகவும் பின்னுக்கு இருக்கின்ற மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சிக்கு இப்போட்டிகள் கடலில் கரைத்த பெருங்காயம் போலப் போதுமானதாக இருக்கவில்லை. தவிர, இப்போட்டிகளில் வந்து சேர்ந்த நாவல்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருந்தன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே, அக்குறையைப் போக்கி நாவல் இலக்கியத்தை நன்கு வளர்த்தெடுத்து, புதிய தோற்றமும் ஏற்றமும் தருவதற்கான பல முயற்சிகள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில் செயற்கைக்கோள் தொலைக்காட்சி, மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகள் போன்றவற்றால் பல்வேறு நடவடிக்கைகளும் முயற்சிகளும் நாவல் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்-பட்டு வருகின்றன. ஆனால், இப்புத்தாயிரத்தாம் ஆண்டுகளல் 2004-ஆம் ஆண்டிலிருந்து 2007-ஆம் ஆண்டுவரை நடத்தப்பட்ட நாவல் எழுதும் போட்டிகளின் எண்ணிக்கை நான்கு ஆகும். இப்போட்டிகளில் ஆர்வத்தோடு கலந்துகொள்ளும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் கூடியுள்ளது. இவற்றுக்கெல்லாம் மேலாக இவ்வாண்டில் (2007) மட்டும் மூன்று நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் அறிவிக்கப்பட்டன. இவற்றைக் கருத்திற்கொண்டே மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்குப் பொற்காலம் தொடங்கியுள்ளது எனப்படுகின்றது. இதனை அறிந்தே மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் நடப்புத் தலைவர் உயர்திரு பெ.ராஜேந்திரன் அவர்கள் பெருமித உணர்வோடு, “மலேசியத் தமிழ் நாவல்துறைக்கு இது பொற்காலம் எனலாமா?” என வியப்பாகக் கேட்பது சிந்திக்கத்-தக்கது.(15) இனி, இந்நான்கு போட்டிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:-

**6.4.1 மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில்**

தொலைக்காட்சி, தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் இணைந்து நடத்திய நாவல் எழுதும் போட்டி (2004/2005) இப்போட்டி 2004, மே மாதத்தில் அதிகாரபூர்வமாக ஓர் ஆடம்பர தங்கும் விடுதியில் கவிப்பேரரசு இரா.வைரமுத்து அவர்களால் அறிவிக்கப்பட்டது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் ஆதி குமணன் அந்நிகழ்வில் உடனிருந்தார். “மலேசியாவில் நல்ல நாவல்கள் அதிகம் தோன்றாத குறையைக் கருத்தில் கொண்டும் எழுதத் திறமையுள்ள முதிர்ந்த எழுத்தாளர்-களும் ஆர்வமுள்ள இளைய

எழுத்தாளர்களும் போதிய ஊக்குவிப்பு இன்றி இருப்பதைக் கருத்தில் கொண்டும் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது" என்ற மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரின் கூற்று இப்போட்டி ஏற்பாடு செய்ததற்கான நோக்கங்களைப் புலப்படுத்துவதாய் உள்ளது.(16) இப்போட்டிக்கு மொத்தம் 34 படைப்புகள் வந்து சேர்ந்தன. இப்படைப்புகளை மூன்று கட்டங்களில் நடுவர்கள் நியமிக்கப்பட்டு, எவ்விதத் குறுக்கீடுமின்றி, அவர்கள் மிகக்கவனமாகவும் சிறப்பாகவும் சிறந்த படைப்புகளை அலசி ஆராய்ந்து தேர்ந்தெடுத்தனர். மூன்றாவது கட்டமான இறுதிக் கட்டத்தேர்விற்குத் தமிழகத்திலிருந்து மூவரும் மலேசியாவிலிருந்து ஒருவரும் நடுவர்களாக நியமிக்கப்பட்டனர். தமிழகத்திலிருந்து நாவல்துறையிலும் எழுத்துத்துறையிலும் சிறந்து விளங்கும் எழுத்தாளர்களான சிவசங்கரி, பிரபஞ்சன், திலீப் குமார் ஆகியோரோடு மலேசியாவிலிருந்து மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையின் இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதியும் இறுதிக்கட்ட நடுவர்களாக இருந்து செயல்பட்டு பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுத்தனர். அவ்வகையில் சிறப்புப் பரிசுக்குக் கோலலங்காட் அ. ரெங்கசாமியின் லங்காட் நதிக்கரை நாவலும் (RM10,000), முதற்பரிசு (RM2,500) சீ.முத்துசாமியின் மண் புழுக்கள் நாவலும், இரண்டாம் பரிசு RM1,500) ம.நவீனின் ஞானத்தின் வாசலிலே நாவலும் மூன்றாம் பரிசு (RM1,000) கோ.புண்ணியவானின் நொய்வப்பூக்கள் நாவலும் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன. இவற்றுள் லங்காட் நதிக்கரை, மண்புழுக்கள் மட்டுமே நூல் வடிவம் பெற்றுள்ளன. ஏனைய படைப்புகளான ஞானத்தின் வாசலிலே, நொய்வப்பூக்கள் ஆகியன நூல்வடிவில் வராமலே உள்ளன. தவிர, ஆறுதல் பரிசுக்குரிய பத்து நாவல்களும் அடையாளங் காணப்பட்டு, பரிசுத்தொகை தலா ஒவ்வொன்றுக்கும் RM500 வழங்கப்பட்டன. ஆறுதல் பரிசுபெற்ற நாவல்களின் விவரம் பின்வருமாறு:-

அ. அசலா? நகலா?
ஆ. மறுமலர்ச்சி
இ. பெண்ணினத்தின் இருபெரும் பேரொளிகள்
ஈ. வாழ்க்கையே அலைபோலே
உ. இக்கரையா? அக்கரையா?
ஊ. மனவீணை
எ. மண் மாற்றம்
ஏ. ஆண்களும் பெண்களும்
ஐ. மலரே மௌனம் ஏன்?
ஒ. உனக்காகவே...!

ஆகியன. இவையாவும் இன்னும் நூலுருவம் பெறாமல் எழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. மொத்தம் 14 நாவல்கள் பரிசுகளைப் பெற்றுள்ளன. ஆக, இதுவரை நடத்தப்பட்ட போட்டிகளில் அதிகமான படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது மலேசியத் தமிழ்நாவல் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். இப்படைப்புகளால் உயர்வடைந்தது நாவல்களின் எண்ணிக்கை மட்டுமல்ல, மலேசியத் தமிழ்நாவல் இலக்கியத்தின் தரமும்கூட உயர்ந்துள்ளது. தவிர, இப்போட்டியின்வழி மூத்த எழுத்தாளர்களோடு இளையதலைமுறை எழுத்தாளர்களும் கலந்து கொண்டுள்ளதானது போட்டியின் நோக்கத்தை எட்டிப் பிடித்ததாக உள்ளது. இப்போட்டியில் வயதில் மிகவும் இளைஞரான ம. நவீன் (அப்போது அவருக்கு வயது இருபத்தொன்று) இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான பரிசளிப்பு விழா மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பரிசளிப்பு நாளன்று (30.09.2005) முதலில் நாவல் பற்றிய கருத்தரங்கு ஒன்றுக்குச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கருத்தரங்கில் நாவல் இலக்கியம் பற்றியும் போட்டியைப்பற்றியும் போட்டிக்கு வந்துகிடைத்த நாவல்கள் பற்றியும் நடுவர்களும் எழுத்தாளர்களும் இலக்கிய ஆர்வலர்களும் பார்வையாளர்களும் அலசியும் ஆராய்ந்தும் கலந்துரையாடினர். இப்பரிசளிப்புவிழாவும் கருத்தரங்கும் கோலாலும்பூருக்கு அருகேயுள்ள Palace of The Golden Horses Hotel எனும் பிரபல நட்சத்திரத் தங்கும் விடுதியில் மிக்க மதிப்போடுகூடிய நிலையில் நடத்தப்பட்டது. மலேசியத் தமிழ் இலக்கிய உலகு முதன்முறையாக மிகவும் பிரபலமான இடத்தில் விழா நிகழ்ச்சிகளைக் கண்டதானது மலேசியத் தமிழ் இலக்கியமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களும் கௌரவமானதோர் இலக்கை அடைய மேற்கொண்ட இலட்சியப் பயணமாய் அது அமைந்திருந்தது எனலாம். மிகவும் மதிப்பான, உயர்வான இடத்தில் பரிசளிப்பு நடத்தப்பட்டதானது எழுத்தாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கௌரவமும் கிடைத்த மதிப்பும் மரியாதையும் ஆகும்.

### 6.4.2 2007-இல் அறிவிக்கப்பட்டுள்ள நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள்

இரண்டாவது முறையாக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அஸ்ட்ரோ வானவில் செயற்கைக்கோள் தொலைக்காட்சி நிலையத்துடன் இணைந்து இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் (01.04.2007) பெட்டாலிங் ஜெயா, ஹில்டன் தங்கும் விடுதியில் கவிப்பேரரசு இரா. வைரமுத்து அவர்களால் அதிகாரபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

தமிழ் நேசன் நாளிதழ் மலேசியாவின் 50-ஆம் ஆண்டின் சுதந்திர முன்னிட்டு குறுநாவல் எழுதும் போட்டியினை நடத்தியுள்ளது. தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் (துறையின் ஐம்பதாவது பொன்விழாவினை முன்னிட்டு) இணைந்து நாவல் எழுதும் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளன.(17)

இவ்வாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள மூன்று போட்டிகளுக்கான முடிவுகளும் அதற்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இன்னும் அறிவிக்கப்படாதால் அவற்றை ஒட்டிய செய்திகளையும் கருத்துகளையும் பிற விவரங்களையும் இக்கட்டுரையில் குறிப்பிட முடியவில்லை.

இப்புத்தாயிரம் தொடங்கி இன்னும் ஏழு ஆண்டுகள் முழுமையாகப் நிறைவடையாத நிலையில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் சிறப்பான வளர்ச்சிகாண வேண்டும் என்பதற்காக இத்தனைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளதானது மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தைத் தரமாக்குவதற்குப் போடப்பட்டுள்ள நல் உரமாகும். எனவே, எதிர்வரும் காலங்களில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் சிறந்து விளங்கும் என்பதனை இப்போட்டிகளைக் கொண்டு துணிந்து நம்பலாம்.

### 6.4.3 புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கு

இரண்டாவது முறையாக நாவல் எழுதும் போட்டி இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் அறிவிப்புச் செய்த பின்னர், எழுத்தாளர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயனளிக்கும் வகையில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மே மாதத்தில் (01-02/05/2007) நாவல் கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தரங்கு கோலாலும்பூரிலுள்ள Puteri Park தங்கும் விடுதியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கானது நாவல் எழுதிக் கொண்டிருப்பவர்கள் நாவல் இலக்கியத்தை ஒட்டிய கூடுதல் விவரங்கள், புதிதாக நாவல் எழுத விரும்புவர்க்கு நாவல் இலக்கியம் பற்றிய உருவம், உட்கூறுகள் பற்றிய விவரங்கள், இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு நாவல் எழுதப் போதிய வழிகாட்டிக் குறிப்புகள், நாவல் இலக்கியத்தைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புவர்க்கு நாவலைப் பற்றிய செய்திகள் போன்றவற்றை விளக்கும் நோக்கிலும் அவைகுறித்துக் கருத்துப்பரிமாற்றங்கள் நிகழ்த்தும் போக்கிலும் ஏற்பாடு செய்யப்படிருந்தது. ஆக, இக்கருத்தரங்கு ஒரு பயிலரங்காகத் திட்டமிடப்பட்டது. இப்பயிலரங்கில் பயிலரங்க உறுப்பினர்களை நாவலைப்பற்றிய விளக்கங்களைக் கேட்டபின்பு நாவல் எழுதுவதற்குரிய ஒரு கதைச்சுருக்கத்தை தயாரிக்கப் பணிக்கப்பட்டு, பின் கதைச்சுருக்கத்தை விளக்கியும் விவாதித்தும் சீர்செய்தும் தரப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து, நாவலை ஒட்டியும் பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் தம் எழுத்துலக வாழ்க்கையைப் பற்றியும் விளக்குவதற்கும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்துவதற்கும் தமிழகத்திலிருந்து சிறந்த பெண்ணிய எழுத்தாளரான திலகவதி ஐ. பி. எஸ். அவர்கள் வரவழைக்கப்படிருந்தார். இக்கருத்தரங்கில் அவரோடு இணைந்து நாவல் இலக்கியத்தின் கூறுகள் பற்றி (Aspects of the novel) மலாயாப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி அவர்கள் விளக்கமளித்தார். தம் நாவல் படைப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு கருத்தரங்கை மிகச் சிறப்பாக வழிநடத்தினார் மலேசியாவின் முன்னோடி நாவலாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர் ரெ. கார்த்திகேசு அவர்கள். 2004/2005 -ஆம் ஆண்டின் நாவல் போட்டியில் சிறப்பு, முதல் பரிசுகளைப் பெற்ற கோலலங்காட் அ. ரெங்கசாமி, சீ. முத்துசாமி ஆகிய இருவரும் பரிசுபெற்ற நாவல் படைப்புபற்றிய (லங்காட் நதிக்கரை, மண் புழுக்கள்) தம அனுபவங்கள் பற்றியும் விளக்கங்கள் அளித்தனர். இவர்களோடு நாடறிந்த எழுத்தாளரும் மூத்த நாவல் ஆசிரியருமான ப.சந்திரகாந்தம் அவர்கள் கடந்த ஆண்டுக்கான (2006) டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப்பரிசுத் திட்டத்தின்கீழ் சிறந்த நூலுக்கான பரிசான மலேசிய ரிங்கிட் ஏழாயிரத்தைப் பெற்ற அவருடைய நாவலான அமுதசுரபிகள் கருவான, உருவான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், இக்கருத்தரங்கில் ஓர் அங்கமாக முதல்நாளின் மாலையில் நாவல் போட்டியில் பரிசு பெற்ற நாவல்களான லங்காட் நதிக்கரை, மண் புழுக்கள் ஆகிய இரு நாவல்களையும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் அச்சிட்டு அவற்றுக்கு வெளியீட்டுவிழா நடத்தியதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கும் இரு நாவல்களின் வெளியீடும் நாவல் எழுதத் துடிப்போர்க்கு ஊக்கம் தந்த நிகழ்வுகளாக அமைந்திருந்தன.

### 6.4.4 புத்தாயிரத்தில் நாவல் வெளிவராத ஆண்டுகள்

புத்தாயிரத்தில் 2003, 2004-ஆம் ஆண்டுகளில் எந்தவொரு நாவலும் நூல்வடிவில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. பத்திரிகைகளில் எழுத்தாளர்களின் படைப்புகள் தொடராக வெளிவந்ததைக் காணமுடிகின்றது. நூல்வடிவில் நாவல் வெளிவராததற்குக் காரணம் யாதென்று சரியாகக் கண்டு கூற இயலவில்லை. 2004-ஆம் ஆண்டிற்குப் பிறகு நாவலுக்காக நான்கு போட்டிகள் அறிவித்ததற்கு நாவல் வெளிவராத இந்த இடைவெளியும் ஒரு காரணமாக அமைந்து ஏற்பாட்டாளர்களுக்கு உந்துதல் தந்திருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

### 7. தொன்னூறுகளுக்குப்பின் (1990-2007) மலேசியத் தமிழ் நாவல்களின் தரமும் திறமும்

தொன்னூறுகளில் அதாவது பத்தாண்டுக் காலத்தில் (1990-1999) சுமார் 43 நாவல்கள்/குறுநாவல்கள் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. புத்தாயிரத்தில் ஏறத்தாழ ஆறரை ஆண்டுகளில் (2000-2007) இதுவரையில் 32 நாவல்கள்/குறுநாவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 2005-ஆம் ஆண்டில் நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, பத்து ஆறுதல் பரிசுகள் பெற்ற நாவல்கள் மொத்தம் 12 இன்னும் நூலுருவம் பெறவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இப்பன்னிரண்டும் நூல்வடிவம் பெறுகின்ற பொழுதே மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தை வளர்க்க மேற்கொள்ளும் முயற்சிகள் முழுமை அடையும் எனலாம். நாவல் போட்டி ஏற்பாட்டாளர்கள் இதனைக் கருத்திற் கொள்வார்கள் என நம்பலாம். ஆக, 1990-ஆம் ஆண்டிலிருந்து 2007- ஆம் ஆண்டுவரை சுமார் 75 நாவல்கள்/குறுநாவல்கள் படைக்கப்-பட்டுள்ளன.(18) குறுகிய காலப்பகுதியில் நாவல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனைக் கடந்த காலங்களில் வெளிவந்த நாவல்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தெரிய வருகின்றது. விடுதலைக்குப்பிறகு 1957-ஆம் ஆண்டிலிருந்து 1989-ஆம் ஆண்டுவரையில் ஏறத்தாழ 33 ஆண்டுகளில் நூல்வடிவில் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை 62 ஆகும். ஆனால், தொன்னூறுகளுக்குப்பின் ஏறத்தாழ 17 ஆண்டுகளில் மட்டும் வெளிவந்துள்ள நாவல்களின் எண்ணிக்கை 75 ஆகும். ஆக, மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சி தொன்னூறுகளுக்குப்பின் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது எனலாம். மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் இந்நிலையை எய்த பாடுபட்டவர்களுள் முதன்மையாளராக மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரைக் குறிப்பிடலாம். அதனையடுத்து, தேசியத் தோட்டத்தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் நாளிதழ் ஆகியவற்றின் பங்களிப்பும் நாவல் வளர்ச்சிக்கு மனநிறைவைத் தருவதாக உள்ளன. அதே வேளையில் மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையினரின் பங்களிப்பான முதன்முதலாக நடத்தப்பட்ட மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கும்(1992) இவ்வாண்டு தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தோடு இணைந்து ஏற்பாடு செய்துள்ள நாவல் எழுதும் போட்டியும் மலேசியத் தமிழ்நாவல் வளர்ச்சிக்கு உதவுவனவாக உள்ளன. தவிர, இப்புத்தாயிரத்தில் செயற்கைக்கோளத் தொலைக்காட்சியான அஸ்ட்ரோ வானவில்லின் பங்களிப்பும் மலேசியத் தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் கணிசமாகக் காணப்படுகின்றது. ஆதாயத்தையே கருத்திற்கொண்டு பணம் புரளும் ஒளிபரப்புகளில் மட்டும் தங்களின் கவனத்தைச் செலுத்தாமல் தாம் சார்ந்த மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனத்தைச் செலுத்துவதால் இத்தகைய போட்டிகளை அஸ்ட்ரோ வானவில் மேற்கொள்வதானது பாராட்டுக்குரிய சீரிய பணியாகும். இவர்களின் இச்சீரிய முயற்சிகளினால் வாடியும் வதங்கியும் போய்க் காணப்பட்ட மலேசியத் தமிழ்நாவல் பயிருக்கு நீரூற்றுவதாகவும் எருவிட்டு உரமேற்றுவதாகவும் அமைந்துள்ளது. அதனால், இங்குத் தொன்னூறுகளுக்குப்பின் நாவல் இலக்கியம் எண்ணிக்கையளவிலும் தரத்திலும் உயர்ந்துகொண்டே வருவதனைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

### 7.1 பத்தாண்டுகால மலேசியத் தமிழ்நாவல்கள்

1990 - 2007 ஆகிய காலப்பகுதியில் சுமார் 75 நாவல்கள் வெளிவந்துள்ளதால் அவ்வளவு படைப்புகளின் தரமும் திறமும் பற்றி இக்கட்டுரையில் விளக்கிட முடியாது என்பதனால் அண்மையப் பத்தாண்டுகளில் (1997 - 2007) வெளிவந்த நாவல்களில் சிறப்பாக அமைந்த நாவல்களின் தனித்தன்மைகள் மட்டுமே இங்குத் தொடர்ந்து விளக்கப்படுகின்றன. கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 52 நாவல்கள் வெளிவந்துள்ளன.(19) இவற்றுள் 12 நாவல்கள் இன்னும் அச்சிடப்படாமல் வெறும் ஏட்டுப்பிரதிகளாகவே அஸ்ட்ரோ தொலைக்காட்சி நிலையத்தாரின் வசமே உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. அச்சிலேறாததால் அவற்றை இக்கட்டுரையின் உள்ளடக்க ஆய்வுக்குப் பயன்படுத்தவில்லை. மீதமுள்ள 40 நாவல்களிலும் பல எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தொன்னூறுகளின் தொடக்கத்திலும் தொடர்களாக வெளிவந்தவை. அவை தாம் எழுந்த அக்காலப் பகுதியான எழுபதுகளிலும் எண்பதுகளிலும் காணப்பட்ட போக்குகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் நெருப்புக்கொடிகள், விடியலுக்காக, விலங்கு, வானம் காணாத விமானங்கள், துன்பங்கள் உறங்குவதில்லை, கால்களே நில்லுங்கள், நினைவுச் சின்னம், அழகின் ஆராதனை, சுவடுகள், சங்கமம் முதலான பத்து நாவல்களும் தொன்னூறுகளுக்குப்பின் காணப்படும் மலேசியத் தமிழ் நாவலாக்கத்தின் உள்ளடக்க ஆய்வுக்குப் பொருந்தாது எனும் காரணத்தால் அவையும் இக்கட்டுரையில் சேர்க்கப்படவில்லை. இந்நாவல்கள் யாவும் எழுபதுகள், எண்பதுகள் ஆகிய காலக்கட்டங்களில் காணப்பட்ட மலேசியத் தமிழ்ச்சமூகத்தையும் அதன் வாழ்வியல் கூறுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதால்

தொன்னூறுகளின் பிற்பகுதிப் போக்குகளை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்களோடு வைத்துக் காண்பது முரண் பட்டுப்போகும் என்பதனால் அவையும் இக்கட்டுரையில் பெயர் சுட்டப்படுவதோடு உள்ளடக்கத்தைக் காண்பதற்குச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எம். ஏ. இளஞ்செல்வனின் பசித்திருக்கும் இளம் கொசுக்கள் எனும் குறுநாவல் 1978-இல் தனி நூலாக வந்து அப்போதைய ஆய்வுகளிலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. அதேபோன்று அவருடைய கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் 1979-ஆம் ஆண்டில் தமிழ் நேசன் பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற படைப்பு ஆகும். அப்பொழுது இப்படைப்பு நூலுருவம் பெறாமல் பின்னர் (1999) நூல்வடிவில் அவரால் கொண்டு வரப்பட்டது. எனவே, இவ்விரு குறுநாவல்களும் தொன்னூறுகளுக்குப்பின் வெளியான நாவல்களின் உள்ளடக்கத்தைக் காணும் ஆய்வில் சேர்ப்பது முறையாகாது என்பதாலும் சேர்த்துக்-கொள்ளப்படவில்லை. அ. கந்தனின் அம்மா, விடியலை நோக்கி, எழுச்சி முதலான நாவல்கள் பள்ளிச்சிறார்களைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ளன. தவிர, இம்மூன்றும் முறையான அச்சும், கட்டமைப்பும் (bind) நூலாக்கப்படாமல் monograph அமைப்பில் அமைந்துள்ளதாலும் இம்மூன்றும் இக்கட்டுரையின் உள்ளடக்க ஆய்வுக்குச் சேர்த்துக்-கொள்ளப்படவில்லை. மேலும், தஞ்சோங் மாலிம் ஆர். சண்முகத்தின் தனயனைக் காப்பாற்றிய தாய், கோலலங்காட் அ.ரெங்கசாமியின் இமயத் தியாகம் ஆகிய இரு நாவல்கள் அரிதின் முயன்றும் இக்கட்டுரையாளருக்குக் கிடைக்கப்பெறாமையால் அவ்விரண்டு நாவல்களும் உள்ளடக்க ஆய்வுக்குச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. சை.பீர்முகம்மதுவின் அக்கினி வளையங்கள் எனும் நாவல் அச்சில் இறுதிக்கட்டப் பணிகளில் உள்ளதாக அதன் படைப்பாளர் தெரிவித்துள்ளதால் அப்படைப்பும் இக்கட்டுரையில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. ஆக, மீதமுள்ள 22 நாவல்களுள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் வாழ்வியல் கூறுகளையும் நெறிகளையும் சிறப்பாக அடையாளங்காட்டி, வெளிப்படுத்தியுள்ள படைப்புகளின் உள்ளடக்கம் மட்டுமே தொடர்ந்து விளக்கப்படுகின்றன. இந்நாவல்களின் உள்ளடக்கங்கள் மலேசிய இந்தியச் சமூகத்தின் சமகாலத்து வாழ்வின் நிலைகளையும் பதிவுசெய்யாமல் விடுபட்டுப்போன கடந்தகால வாழ்வின் சுவடுகளையும் வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

**7.1.1 பத்தாண்டுகால மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கம் (1997-2007)**

பத்தாண்டு காலத்தில் வெளிவந்த மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கத்தைப் பார்க்குங்கால் அவை இருவகையாக அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:-

அ. கடந்தகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்
ஆ. சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்.

இனி, இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக விளக்கப்படுகின்றன.

**7.1.1.1 கடந்தகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்**

இன்று மலேசியாவில் காணும் இந்தியச் சமுதாயத்தின் வாழ்க்கை வரலாறு இந்நாட்டில் ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளைக் கடந்ததாக உள்ளது. இந்நீண்டகாலப்பரப்பில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மலேசிய இந்தியர்கள் உலகின், உள்நாட்டின் அரசியல், பொருளியல், சமூகவியல் தாக்கங்கள், மாற்றங்கள், பாதிப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்ப்ப் பல்வேறு அவலங்களுக்கு ஆளாகி வருந்தியுள்ளனர் என்பது வரலாற்று உண்மைகள் ஆகும். ஆனால், இவற்றுள் மிகுதியானவை முறையாக இலக்கியங்களில் பதிவு செய்து வைக்கப்படவில்லை என்பது வருந்துதற்குரியது.

குறிப்பாக, அன்றைய மலாயாவில் இரண்டாம் உலகப்போரின்போது காணப்பட்ட ஜப்பானியர் ஆட்சி, சயாம் மரண ரயில்பாதை அமைத்தல், கம்யூனிஸ்டு தீவீரவாதிகளின் தாக்குதல்கள், அன்றையத் தோட்டப்-புறங்களின் உண்மை நிலவரங்ளும் வாழ்வியல் கூறுகளும் போன்றவை முறையாகவும் முழுமையாகவும் இலக்கியப் படைப்புகளில் பதிவுசெய்யப்-படாமல் உள்ளநிலையே மலேசியத் தமிழ் இலக்கியத்தில் இன்றளவும் காணப்படுகின்றது. குறிப்பாகச் சில காலக்கட்டங்களைப் பற்றியவை மலேசியத் தமிழ் இலக்கியங்களில் காட்டப்படாமல் வெற்றிடமாகவே உள்ளது அறியத்தக்கது. இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் வரலாறாக்க் கருதப்படுகின்றன. இலக்கியங்கள் தாம் சார்ந்த இனத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்தின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் பதிவு செய்யும் முக்கிய ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் முறையாகப் பதிவுசெய்யாத கடந்தகால வாழ்வியல் கூறுகளைப் பதிவுசெய்து அச்சில் பிடித்து வைக்கும் நோக்கிலும் பின்னர் அவற்றை இளையதலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் நோக்கிலும் தொன்னூறுகளிலும் புத்தாயிரத்திலும் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்களுள் பலர் முயன்றுள்ளனர். அவ்வகையில் கடந்தகால வரலாற்றுப் பின்னணியில் காணப்பட்ட அவலவாழ்க்கையைக் காட்டும் வகையில் சில நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவையாவன:-

அ. கள்ளச்சந்தையில் சொக்கத்தங்கங்கள்(செங்கதிரோன்)
ஆ. லங்காட் நதிக்கரை(கோலலங்காட் அ.ரெங்கசாமி)
இ. மண் புழுக்கள்(சீ.முத்துசாமி)
ஈ. அமுதசுரபிகள்(ப.சந்திரகாந்தம்)

இனி, இவற்றுள் கடந்தகால மலேசிய இந்தியர்களின் வாழ்வியல்-கூறுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கும் மூன்று நாவல்களின் உள்ளடக்கம் மட்டுமே தொடர்ந்து விளக்கப்படுகின்றன.

**அ. லங்காட் நதிக்கரை (கோலலங்காட் அ.ரெங்கசாமி)**

இந்நாவலின் உள்ளடக்கமானது நாட்டின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பகுதியைப்பற்றிப் பேசுகின்றது. இரண்டாம் உலகப்போரின் இறுதியில் கொடுங்கோலாட்சி நடத்திய ஜப்பானியர் தோல்விகண்டு மலாயாவை விட்டுச் செல்வதிலிருந்து கதை தொடங்குகின்றது. ஜப்பானியர் ஆட்சியில் இல்லை. ஆங்கிலேயர் மீண்டும் வந்து சேரவில்லை. இடைப்பட்ட இரண்டுவார காலத்திற்குள் மலாயா மக்களின் ஜப்பானிய எதிர்ப்புப்படையில் (Malayan Peoples Anti Japanese Army) இருந்த மிகுதியான கம்யூனிஸ்டுகள் அராஜக ஆட்சி நடத்தி மலாயா மக்களை ஆட்டிப்படைத்தனர். மலாயாவை ஒரு கம்யூனிஸ நாடாக மாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டனர். அந்த அராஜக ஆட்சியின் பிடியில் சிக்கிய சிலாங்கூர் மாநிலத்திலுள்ள லங்காட் நதிக்கரை மக்கள் குறிப்பாக இந்திய மக்கள் பட்ட அவல வாழ்வு நாவல் முழுவதும் விவரிக்கப்பட்டுள்ளன. மீண்டும் ஆங்கிலேயர் நாட்டுக்குவந்த பின்னர் அவர்கள் மேற்கொண்ட கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளாலும் இந்தியர்கள் அதிகப் பாதிப்புக்-குள்ளானதை இந்நாவல் காட்டுகின்றது. 'உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி' என்ற பழமொழியின் விளக்கமாக அமைந்திருந்தது நாட்டில் அப்போதைய மலேசிய இந்தியர்களின் நிலை என்பதனை இந்நாவலின் உள்ளடக்கம் தொடக்கம் முதல் இறுதிவரை ஆர்வத்துடனும் விறுவிறுப்புடனும் திகிலுடனும் காட்டி நிற்கின்றது. கம்யூனிஸடுப் பயங்கரவாதிகளினால் ஏற்பட்ட வன்முறைகள், கொடுஞ்செயல்கள், பயங்கர அனுபவங்கள் ஆகியன நாவலின் உள்ளடக்கத்தில் இயல்பாகக் காட்டப்பட்டுள்ளன.

இந்நாவலின் முதன்மைமாந்தர் வெள்ளையன். கதாசிரியர் வெள்ளையனின் நோக்கில் கதையைக் கொண்டு சென்றுள்ளார். லங்காட் மக்களின் மனங்கவர்ந்த தலைவராயிருந்த அவர் தம் அறிவுக்கூர்மை-யினால் கம்யூனிஸ்டு பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மக்களைக் காக்கும் காவலனாக காட்டப்பட்டுள்ளார். அவர் எவ்வாறு மக்களைக் காக்கிறார் என்பதே உள்ளடக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் அவருடைய பாத்திரப்படைப்பு சிறப்பாக வார்க்கப்பட்டுள்ளது. கதையின் உள்ளடக்கத்தில் கதாசிரியரின் சமூக அக்கறை வெளிப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் குரலாகவும் சமூக வரலாறாகவும் இது அமைந்துள்ளது. அவ்வகையில் நாவலில் மண்ணின் மணம் இயல்பாக வெளிப்படுகின்றது. "உரலுக்கு ஒரு பக்கம் இடி! மத்தளத்துக்கு இருபக்கமும் இடி!ன்னு சொல்வாக. அந்தநெலம இப்ப நமக்கு வந்திருக்கு.

கம்யூனிஸ்டுகாரனுக்கு உதவி செஞ்சா மரணதண்டனை நிச்சயம்ன்னு அரசாங்கம் ஒரு பக்கம் சட்டத்தைக் காட்டி கழுத்தை நெருக்குது. எங்களக் காட்டிக் கொடுக்கிறவங்களை நாங்க உயிரோடு விடமாட்டோம்ன்னு இன்னொரு பக்கம் கம்யூனிஸ்டு-காரனுங்க துப்பாக்கியைக் காட்டுறானுக! நாம யாருக்குப் பயப்படுறது! எப்படி வாழுறது!" பெருமூச்சு விட்டார் வெள்ளையன்(20) எனவரும் பகுதி அன்றைய வரலாறு மிகச்சிறப்பாக நாவலாக்கம் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

**ஆ. மண் புழுக்கள் (சீ.முத்துசாமி)**

நீண்டகாலப் பரப்பை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல் இது. சில தலைமுறைகளை உள்ளடக்கிய இப்படைப்பில் ஓர் இனத்தின் வரலாற்றையே ஒட்டுமொத்தமாக்க் காட்டிவிட வேண்டும் என்ற கதாசிரியரின் வேகத்தையும் துடிப்பையும் காணமுடிகின்றது. இந்நாவல் இந்திய இனத்தை இந்நாட்டில் புழுவாகக் கருதி கட்டியாண்ட அதிகார வர்க்கத்தினரைக் காட்டும் முயற்சி இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. அடிப்படையில் அதிகாரம் ஒன்றுதான். அது பல பெயர்களில் பலவாகச் சுட்டப்படுகின்றன. ஒரு நூற்றாண்டுகால மலேசிய இந்தியர்களின் வரலாற்றில் இடம் பெற்றுள்ள அதிகார வர்க்கங்களின் அடக்குமுறையும் ஆர்ப்பாட்டமும் நாவல் முழுவதும் காட்டப்பட்டுள்ளது. தோட்டப்புற நிர்வாகம் எனும் அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறை, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரப்போக்கு, ஜப்பானியர்களின் அடக்குமுறை, கொடுங்கோலாட்சி, கம்யூனிஸ்டுப் பயங்கரவாதிகளின் வன்முறைப்போக்கு முதலான அதிகார வர்க்கங்களினால் பட்ட அடிகளின் சுவடுகளை நாவல் முழுக்கக் காட்டிச் சென்றுள்ளார் கதாசிரியர். இவை புறத்தே இருந்து வந்த பாதிப்புகள் ஆகும். அதே வேளையில் சமுதாயத்தின் உள்ளருந்தே புரையோடிப்போன, செல்லரித்த போக்குகளான சாதிவேறுபாடு,

ஒற்றுமையற்ற போக்கு, குடிப்பழக்கம் போன்ற சீர்கேடுகளினால் ஏற்பட்ட நலிவுகளையும் இந்நாவல் விட்டுவிடாமல் பேசுகின்றது. சுருங்கக் கூறின் மலேசிய இந்தியர்களின் வாழ்வின் உள்ளும் புறமும் விளக்கப்பட்டுள்ளது.

கதாசிரியர் கதையில் வரும் செங்காளி என்ற கதைமாந்தரின் நோக்கில் கதை என்பதனைவிட அனுபவப் பகிர்வுகள் காட்டிச் செல்லப்பட்டுள்ளன. செங்காளியின் மன ஓட்டத்தின்வழி இவ்வனுபவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மன ஓட்டத்திற்கேற்ப ஒரே நேரத்தில் பல்வேறு காலக்கட்டங்களும் நிகழ்ச்சிகளும் கதைமாந்தர்களும் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எதனையும் நிரல்பட அமைக்காமல் பின்நவீனத்துவ அடிப்படையில் எதற்கும் கட்டுப்படாது ஒரே நேரத்தில் பலவற்றையும் காட்டிச் சென்றுள்ளது அனுபவங்களையும் உணர்வுகளையும் எந்தவொரு அலங்காரமும் இல்லாமல் கதாசிரியர் அப்படியே கொட்டிச் சென்றுள்ளார். மண்ணின் செழிப்புக்கு மண் புழுக்கள் உதவுவதைப்போல இந்நாட்டு வளப்பத்திற்கு மண்புழுபோல விளங்கிய இந்தியச் சமுதாயத்தை அதிகார வர்க்கம் மதிக்கவும் இல்லை; கவனிக்கவும் இல்லை; கண்டுகொள்ளாமல் மண்ணிலேயே விட்டுவிட்டது என்பதனைப் பொருள்படும்படி நாவலுக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் வந்த மலேசியத் தமிழ்நாவல்களிலேயே இந்த அளவுக்குத் தோட்டப்புற மக்களையும் அவர்தம் வாழ்வையும் உள்வாங்கிக்கொண்டு உள்ளதை உள்ளவாறே, ஒதுங்கலும் இல்லாமல், மிகையும் இல்லாமல் அப்படியே வெளிப்படுத்திக் காட்டியுள்ள அற்புத நாவல் இதுதான் என்று சொன்னால் அதில் மிகையில்லை. தோட்டப்புறக் காட்சிகளும் அங்குள்ள சூழல்களும் தோட்டப்புற மொழியும் அங்குள்ள மாந்தர்களோடு கைகோர்த்து நாவலில் உலா வருவது படிப்பவரை ஒரு கணம் சிலிர்க்க வைத்துவிடும். படிப்பவர் ஒவ்வொருவரையும் நாவலின் மாந்தர்களோடும் அவர்களின் அறியாமை நிறைந்த வாழ்க்கையோடும் ஒன்றச்செய்து அவர்களோடு தோட்டப்புறத்தில் சேர்ந்து வாழச் செய்துவிடும் தன்மை இந்நாவலுக்குண்டு. “நாநூறு மரத்துல குனிஞ்சு நிமிந்து, பொணமா கனக்குற ஆளு ஒசர ஏணிய தோள்ல சொமந்து மலக்காட்டுல ஓடி நாநூறு தடவ ஏணில ஏறி எறங்கி மரத்த சீவி...பால எடுத்து வாளிய காண்டால மாட்டி தோள்ல வச்சு வெறுங்கால்ல கித்தாகாட்டு ஒத்தயடிப் பாதயில லொங்குலொங்குனு மூச்சு வாங்க பால் கொட்டாய்க்கு ஓடி பால ஊத்திட்டு வூட்டுக்கு வந்து பழச வயித்துல கொட்டிகிட்டு கூத்து கொட்டாய்க்கு வந்து ஒடம்ப சாச்சா, களப்புல ஒடம்பு அடிச்சு போட்ட மாதிரி வலிக்குது”(21) எனவரும் பகுதியில் தோட்டப்பாட்டாளியின் வாழ்வியல்நிலை அப்படியே இறக்கி வைக்கப்-பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### இ. அமுதசுரபிகள் (ப.சந்திரகாந்தம்)

மலேசிய இந்தியர்களின் வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ள இந்நாவல் தயாபரன் எனும் நாடகக் கலைஞனின் கதையாக அமைக்கப்பட்டுள்ளது. தன் வாழ்க்கையையே தன் அக்கா மதுராவுக்காக அர்ப்பணித்தும் அவளை அவனால் காப்பாற்ற முடியாமல் இழந்து விடுவதுதான் கதையாகும். இக்கதை நடக்கும் காலப்பகுதியாக நாவலாசிரியர் இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். கலைஞர்கள் கலைச்செல்வத்தை மக்களுக்கு வாரி வாரி வழங்குவதால் அவர்கள் அள்ளஅள்ளக் குறையாத அமுதசுரபிகள் என வருணிக்கப்படுகின்றனர். “நம்முடைய சிரமங்களையும் சோகங்களையும் மறந்திட்டு மக்களைச் சந்தோஷப்-படுத்துறோமே... அதுதான் நாம் செய்யிற கலைத்தொண்டு... கலைஞர்கள் ஏழையா இருக்கலாம்... ஆனா, அள்ள அள்ளக் குறையாத செல்வம் நம்மகிட்டே இருக்கு... அதுதான் கலைச்செல்வம்... அமுதசுரபியைப்பத்தி கேள்விப்பட்டிருப்பீங்க... மணிமேகலைக் காப்பியத்தில் அதைப்பத்திக் குறிப்பிட்டிருக்-காங்க... மணிமேகலைக்குக் கிடைத்த அந்த அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி ஏழைகளின் பசியையும் போக்கியிருந்த-தாம்... கலைஞர்களும் ஒருவகையில் அமுதசுரபிகள்தாம் ... குறையாம இருக்கற நம் கலைச்செல்வத்தை மக்களுக்கு வாரி வழங்கிக்கிட்டே இருக்கிறோம்...”(22) எனவே, கலைஞரைப் பற்றிய கதையாக இது இருப்பதால் நாவலுக்குப் பொருத்தமாக அமுதசுரபிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நாவலின் கதை தமிழகத்திலும் மலாயாவிலும் நடப்பதாக மாறி மாறிக் காட்டப்பட்டுள்ளது.

சுமார் ஏழாண்டு காலம் நடைபெறும் கதையில் போகிற போக்கில் கதாசிரியர் பொருத்தமாக அன்றைய மலாயாவின் அரசியல் போக்குகளையும் இந்தியச் சமுதாயத்தின் நிலவரங்களையும் காட்டிச்செல்வது நாவலுக்குத் தனித்தன்மையையும் சிறப்பையும் அளித்துள்ளது. அவ்வகையில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் இந்நாட்டிற்கு உடலுழைப்புத் தொழிலாளர்களாக இறக்குமதி செய்யப்பட்ட தமிழர்களின் தோட்டப்புற வாழ்வும் தமிழகத்தில் நாடகக்கலையை மேற்கொண்ட நாடகக்குழுக்களின் கலையுலக வாழ்வும் இந்நாவலின் பின்னணியில் வைத்து அதற்கேற்ப ஓர் அழகான கதையை அமைத்துள்ளார் கதாசிரியர்.

இந்நாட்டிற்கு இந்தியர்களை இறக்குமதி செய்யப் பிரிட்டிஷார் மேற்கொண்ட ஒப்பந்தக்கூலிமுறை, பின்னர் அறிமுகப்படுத்திய கங்காணிமுறை, தொழிலாளர்கள் தோட்டநிர்வாகத்தினாலும் கங்காணிகளாலும் மோசமாக நடத்தப்பட்டமுறை, தோட்டநிர்வாகத்தின் கெடுபிடிகளும் அடக்குமுறைகளும், கமிஷனுக்காக

(தலைக்காசு) சொந்த இனத்தையே மிக மோசமாக நடத்திய கங்காணிகள், உலகளவில் பொருளாதார மந்தம், ரப்பர்/பால்விலை வீழ்ச்சி பற்றிய நிலவரங்கள், தொழிலாளர் மத்தியில் எழுந்த விழிப்புணர்ச்சியும் அதனால் விளைந்த கிளர்ச்சிகளும், மலாயா இந்தியர்களை ஒருங்கிணைக்கத் தோற்றுவிக்கப்பட்ட சம்மேளனம், அன்றைய இந்தியத் தலைவர்கள், அவர்களின் போராட்டங்கள், தொழிற்சங்கங்களின் தோற்றம், தொழிலாளர்களையும் தொழில் சங்கங்களையும் ஒடுக்கப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகார நடவடிக்கை, தொழிலாளர்களின் சம்பளத் தகராறுகள் போன்ற உண்மை வரலாற்றுச் செய்திகள் கதைப்போக்கில் காட்டப்பட்டுள்ளன.

தவிர, பல்வேறு சவால்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் நமது கலை, பண்பாடு போன்றவற்றை இழந்துவிடாமல் அவற்றைக் கட்டிக்காக்கும் கலைஞர்களின் முயற்சிகளையும் நாவலில் காட்டிச் சென்றுள்ளார். இவ்வாறு காட்டும் வேளையில் தமிழகத்திலும் மலாயாவிலும் நாடகக்கலை பற்றிய செய்திகள், நாடகக் கலைஞர்கள், நாடகக் குழுக்கள், சினிமாவினால் நாடகக் கலையின் நலிவுகள், நாடகக் கலைக்காக வாழ்வையே அர்ப்பணித்த கலைஞர்கள் போன்ற உண்மைச் செய்திகளையும் கதைப்போக்கில் பொருத்தமாக இணைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 7.1.1.2 சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்கள்

சமகால வாழ்வியலின் உள்ளடக்கம் என்பது நாவலாசிரியர் தாம் எழுதிய நாவல் வெளியான காலத்து நிகழ்வுகளைப் பிரதிபலிப்பது ஆகும். நாவலாசிரியர் தாம் கண்டு, கேட்டு, உயிர்த்த அன்றாட வாழ்வியல் நிலவரங்கள், போக்குகள், சிக்கல்கள் ஆகியவற்றைக் காட்டும் வகையில் நாவல் படைப்பது ஆகும். குறிப்பாகத் தொன்னூறுகளில் மலேசிய இந்தியர்களின் வாழ்க்கை பல்வேறு சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் இடையில் அமைந்திருந்தது. இந்தியச் சமுதாயத்தின் வாழ்க்கை தொன்னூறுகளில் அரசியல் ரீதியாகவும் பொருளியல் ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களுக்காளாகிப் புதியதோற்றத்தைப் பெறத்தொடங்கியிருந்தது. எனவே, அப்போதைய மலேசிய இந்தியச் சமுதாயத்தில் வாழ்வியல் சிக்கல்கள், நெருக்கடிகள் இக்காலப்பகுதியில் அதிகரித்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. இச்சிக்கல்களும் நெருக்கடிகளும் பெருகிக் கூர்மைப்பட்ட சூழலில் அவை இலக்கியங்களில் பேசப்படும் நிலையை அடைகின்றன. எனவே, தொன்னூறுகளில் மலேசியத் தமிழ் நாவல்களில் அச்சிக்கல்கள், நெருக்கடிகள் ஆகியவற்றை உள்ளிட்ட புதிய போக்குகள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக, தொன்னூறுகளில் தனிமனித உணர்வுகளும் சிக்கல்களும் அவற்றையொட்டிய போராட்டங்களும் ஒருபுறம் வலுபெறத் தொடங்கியிருந்ததனைக் காணமுடிகின்றது. இவ்வகையான நாவல்களில் சமுதாய உணர்வைவிடத் தனிமனித உணர்வுகளுக்கு முதன்மை தரப்படுவதால் அவ்வுணர்வுகள் மேலோங்கிக் காணப்படுகின்றன. சமுதாயத்தின் அங்கங்களாயிருக்கும் தனிமனிதர்களின் தேவைகளும் உணர்வுகளும் குறைவில்லாமல் காக்கப்படும்போதே சமுதாயம் சிக்கலில்லாமல் சுமுகப்போக்கில் நலம்பெற்று, சீரானவழியில் செல்லும் என்பது இவ்வகையான நாவல்களில் அடிநாதமாக உணர்த்தப்படும் அடிப்படைச் செய்திகள் ஆகும். தனிமனிதர்களின் நியாயமான உணர்வுகளும் தேவைகளும் காக்கப்படாமல் போகும் பட்சத்தில் காலப்போக்கில் அவை சமுதாயத்தில் அமைதியின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, வாழ்வை அலைகழிக்கும் நிலையை ஏற்படுத்தும்போது அவை சமுதாயப்பிரச்சினையாக உருமாற வாய்ப்புண்டு. எனவே, தனிமனித நிலையிலேயே அக்குறைபாடுகள் களையப்பட வேண்டும் எனும் நோக்கத்திலேயே இவ்வகை நாவல்கள் எழுதப்படுகின்றன. இக்காலப்பகுதியில் தனிமனித உணர்வுகளை மிகையில்லாமலும் நடப்பியல் பாங்கு குன்றாமலும் இயல்பாக வெளிப்படுத்திய நாவலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக பேராசிரியர் ரெ. கார்த்திகேசுவின் அந்திம காலம் எனும் நாவலைக் குறிப்பிடலாம்.

தொன்னூறுகளில் மலேசிய இந்தியச் சமுதாயம் எதிர்நோக்கிய சீரழிவுகளும் சிக்கல்களும் சமுதாய உணர்வுடன் நாவல்களின் உள்ளடக்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பிரச்சினை, இளைஞர்களின் வன்னடத்தையும் வன்முறைச் செயல்களும், ஆணாதிக்கப்போக்கு, சினிமா மோகம் கொணர்ந்த சீரழிவு, பங்களாதேஷ் இளைஞர்களால் இந்தியப்பெண்களுக்கு விளைந்துள்ள தீமைகள் போன்றவை தொன்னூறுகளில் இந்தியச் சமுதாயத்தில் நெருக்கடியை உண்டுபண்ணிய பிரச்சினைகளாகும். தொன்னூறுகளின் மலேசியத் தமிழ் நாவலாசிரியர்கள் இப்பிரச்சினைகளைச் சமுதாயக்கண்கொண்டும் அக்கறை கொண்டும் பார்த்து அவற்றைத் தங்களின் படைப்புகளின் உள்ளடக்கங்களாக ஆக்கிக் கொண்டுள்ளனர். அவ்வகையில் படைக்கப்பட்டுள்ள நாவல்கள் பின்வருமாறு:-

1. சுவர் (டாக்டர் சி. சொக்கலிங்கம்)
2. பெண் குதிரை (சை. பீர் முகம்மது)
3. நித்திலப்பூ (வீ. கு. சந்திரசேகரன்)
4. ராகதேவதை (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
5. நல்லவராவதும் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)

6. அந்திம காலம் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
7. கோடுகள் கோலங்களானால் (பாவை)
8. நொண்டிப்பறவை (பாவை)
9. விழலும் நீரும் (மா. இராமையா)
10. காதலினால் அல்ல (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
11. நாளைக்கு (பேராசிரியர் ரெ. கர்த்திகேசு)
12. மன ஊனங்கள் (மா. இராமையா)
13. ஊனக்கனவுகள் (மா. இராமையா)
14. புழுத்துளைகள் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
15. தீக்காற்று (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
16. குயல்கூவி துயில்எழுப்ப (நிர்மலா பெருமாள்)
17. இந்த மண்ணுக்கும் மணமுண்டு (சி. வடிவேலு)
18. சூதாட்டம் ஆடும் காலம் (பேராசிரியர் ரெ. கார்த்திகேசு)
19. கனவுப்பந்தல் (நா. ஆ. செங்குட்டுவன்)
20. வேள்வி (நிர்மலா பெருமாள்)

**7.1.1.2.1 தொன்னூறுகளுக்குப்பின் தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்கள்**

இந்தத் தொன்னூறுகளின் தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்களைக் காணும்போது அங்குத் தலித் மக்களின் சிக்கல்கள், மார்க்சியச் சிந்தனைகள், பெண்ணின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் பெண்ணியச் சிந்தனைகள் ஆகியன நாவல்களின் உள்ளடக்கத்தில் அழுத்தம் பெறுவதனைக் காணமுடிகின்றது. தமிழகச் சமூகத்தில் சிக்கல்கள் பெருகிக் கூர்மைப்பட்ட சூழலில் தமிழக நாவல்களில் இத்தகைய புதியபோக்குகள் எழுந்து தீவீரம் அடைந்தன. முன்னைய நடப்பியல் நாவல் படைப்பு தொடரும் அதேவேளையில் பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், பின் நவீனத்துவம் போன்ற அணுகுமுறையில் நாவல்கள் அதிகம் வெளிவரத் தொடங்கின. கதைசொல்லும் நெறியிலும் புதிய அணுகுமுறைகள் எழுந்தன. அமைப்பியல் நோக்கில் நாவல்கள் எழுதப்படுதல், கதைக்கு முதன்மை தராதநிலை ஆகியன கதைசொல்லும் நெறியில் தமிழகத்தில் காணப்பட்டன. எம்.ஜே.சுரேஷ், ஜெயமோகன், சுப்ரபாரதிமணியன், பெருமாள் முருகன், பாமா, பாவைச்சந்திரன் போன்றவர்களின் நாவல்களில் இவ்வகைப் போக்குகள் நாவல்களின் உள்ளடக்கங்களாயின.

**7.1.1.2.2 தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ்நாவல்களின் உள்ளடக்கங்கள்**

தமிழகத்து நாவல்களின் உள்ளடக்கங்களுள் தலித்தியம், மார்க்சியம் நீங்கலாக பெண்ணியம் மட்டுமே மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது. மலேசியத் தமிழ் நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகளுக்கு அழுத்தம் கொடுத்துப் படைக்கும் போக்கு தொன்னூறு-களில் காணப்படுகின்றது. தமிழகத்தைப்போல சாதீயத்தின் தீமைகள் மலேசிய மண்ணில் காணப்படாததால், மலேசியத் தமிழ் நாவல்களில் தலித்தியச் சிந்தனைகளைக் காண முடியவில்லை. மார்க்சியத்தின் பெயரால் எழும் கருத்துகளுக்கும் சிந்தனைகளுக்கும் மலேசியச் சமுதாயத்தில் வெளியிடுவதற்கு அறவே இடம் கிடையாது. அதனால் மார்க்சியப் போக்கு அல்லது பார்வை கொண்ட நாவல்களும் தோன்றுவதற்கு இங்கு வாய்ப்பில்லை.

பெண்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதால் அதுபற்றிய சிந்தனைகள் தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்களில் ஒலிக்கத் தொடங்கிக் கூர்மையடைந்து வருவதனைக் காணமுடிகின்றது. இங்குப் படைப்புகளில் வலியுறுத்தப்படும், பேசப்படும் பெண்ணியம் மிகுதியும் மிதவாதப் பெண்ணியமாகவே காணப்படுகின்றது. மலேசியாவின் பல்லின, சமயச் சூழலுக்கு மிதவாதப் பெண்ணியமே ஏற்றதாகவும் தேவைப்படுவதாகவும் உள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. பெண்குதிரை, நாளைக்கு, போன்ற நாவல்களில் பெண்ணியச் சிந்தனைகள் சிறப்பாக எழுப்பப்பட்டுள்ளன.

பின்நவீனத்துவக் கருத்தியல் பற்றிய புரிதலும் உள்வாங்குதலும் உடைய எழுத்தாளர்கள் மலேசிய மண்ணில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே கானப்படுகின்றனர். ஆகவே, பின்நவீனத்துவக் கருத்தியல் மலேசிய மண்ணில் மிகக்குறைந்த எழுத்தாளரகளிடம் மட்டுமே தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. அதனால், பின்நவீனத்துவ அடிப்படையில் முழுக்க முழுக்க எழுதப்பட்ட நாவல் என்று எந்தவொரு மலேசியத் தமிழ் நாவலையும் இத்தருணத்தில் சுட்ட முடியவில்லை. ஆனால், பின்நவீனத்துவத்தின் சில கூறுகள் உள்ளடங்கிய நாவலாக சீ.முத்துசாமியின் மண் புழுக்கள் எனும் நாவலில் காணமுடிகின்றது. அந்த வகையில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் பின்நவீனத்துவத்தின் கூறுகளைப் பயன்படுத்தி நாவல் எழுதத் தொடங்கிய முன்னோடி என்று அவரைச் சுட்டலாம்.

இனி, சமகால வாழ்வியலை உள்ளடமாகக் கொண்டு வெளிவந்துள்ள நாவல்களைப்பற்றிக் காண்போம். இந்நாவல்களில் காட்டப்பட்டுள்ள சமகாலத்துப் பிரச்சினைகள் பற்றியும் காண்போம். சுவர் எனும் நாவல் போதைப்பொருள் பழக்கத்தினால் சீரழிந்து போகும் இளைஞர் சமுதாயத்தைக் குறிப்பாக மாணவர் சமுதாயத்தைக் காட்டுகின்றது. இந்நாவலில் வரும் கார்த்திகேயன் படிவம் ஆறு படிக்கும் மாணவன் ஆவான். அக்கறையற்ற தந்தையின் அன்புக்கு ஏங்கித்தவித்து, அது கிடைக்காதநிலையில் போதைப்பொருளை நாடி அதற்கு அடிமையாகி இறுதியில் அதற்கே பலியாகிப்போவது கதையில் காட்டப்பட்டுள்ளது.

பெண் குதிரை எனும் நாவல் இன்றையநிலையில் மாறிவரும் பெண்மையையும் ஆணாதிக்கத்திற்கு எதிராக வளர்ந்துவரும் பெண்ணியச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தப்படுத்தியுள்ளது. தவிர, இந்நாவலில் ஆணாதிக்கத்தைத் தகர்க்க முயலும் போக்கும் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலில் வரும் கமலவேணி மிகவும் சுதந்திரமாக வாழ ஆசைப்பட்டுப் பல ஆடவர்களோடு சுதந்திரமாகப் பழகியும் உறவுகொண்டும் திருப்தியுறாமல், இறுதியில் ஆண்களை வெறுத்து தீவீரவாதப் பெண்ணியம் பேசி, அதற்கு ஏற்றது மேலை நாடே என்று கருதி அங்கேயே சென்றுவிடுகிறாள்.

நாளைக்கு எனும் நாவலில் வரும் ராஜேஸ்வரி தன் ஒரே தங்கை பத்மாவுக்காக கணவனையும் மாமியாரையும் எதிர்த்துக்கொண்டு வாழ்க்கையையே இழக்கத் துணியும் அளவிற்கும் செல்லத் தயாராகி விட்டதாகக் காட்டப்படுவதானது மலேசியத் தமிழ்நாவலின் உள்ளடக்கத்திற்குப் புதிய போக்காகப்படுகின்றது. இக்குறுநாவலில் கதாசிரியர் மிதவாதப் பெண்ணியத்தை மெல்லிய இழையாக நாவலில் கதையோடு கலந்து குழைத்துத் தந்துள்ளது சிறப்பாக உள்ளது.

நித்திலப்பூ எனும் நாவல் காதலுக்கும் காமத்திற்கும் வேறுபாடு அறியமறுக்கின்ற இன்றைய இளசுகளின் போக்குகளைச் சாடுவதோடு பங்களாதேஷ் இளைஞர்களின் காமச்சேட்டைகளின் கவர்ச்சியில் விட்டில்பூச்சிகளாய் கவரப்பட்டு இந்தியப் பெண்கள் சிக்கிச் சீரழிவதைக் காட்டுகின்றது. தொன்னூறுகளில் நாட்டிற்குள் பிழைப்புக்காகவந்த பங்களாதேஷ் இளைஞர்கள் தம் காமச்சேட்டைகளை மலேசியப் பெண்களிடம் குறிப்பாக, இந்தியப் பெண்களிடம் கட்டவிழ்த்து விடப்பட்டது அப்போதைய நடப்பியல் சிக்கலாகும். இந்நாவலில் வரும் மங்கை பங்களாதேஷ் இளைஞர்களின் வலையில் நம்மினப் பெண்கள் விழாதவகையில் போதிய பாதுகாப்பும் தந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் தேவையேற்பட்டால் அவர்களைத் தாக்கவும் தயங்கக் கூடாது என்று காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீனச் சூழலில் காதலுக்குரிய இடம் யாது என்பதனை அடையாளம் காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ள நாவல் காதலினால் அல்ல. இன்று கல்வியோடு கூடிய நிலையில் அகவளர்ச்சியும் புறவளர்ச்சியும் ஏற்பட்டிருந்தும்கூட, சமுதாயத்தில் காதலுக்குரிய மதிப்பும் மரியாதையும் எப்படி இருக்கிறது என்பதனை எதார்த்தபூர்வமாக அணுகும் நாவல் இது. இந்நாவலின் கதையில்வரும் பல்கலைக்கழக மாணவர்களான கணேஷ், அகிலா அகிய இரு கதைமாந்தர்மூலம் இன்றையநிலையில் காதலின்நிலை காட்டப்படுகின்றது. இன்றைய படித்த இளைஞர்கள் காதலைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துகளும் காதலை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதும் அவ்விருவரின் அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்களின் வழியாக உணர்த்தப்பட்டுள்ளன. "இந்தக் காதல் எவ்வளவு தூரம் சரி, எவ்வளவு தூரம் பிழைன்னு தெரியில. ரொம்ப சீக்கிரமாப் பழகி ரொம்ப சீக்கிரமா முடிவுக்கு வந்திடறோமோன்னு ஒரு சந்தேகம்! இதுக்கு இன்னும் கொஞ்சம் கால அவகாசம் கொடுத்து பின்னால எல்லாத்தையும் உறுதி செய்யலாமேன்னு ஒரு தயக்கம்!"(23) எனவரும் பகுதியிலிருந்து இன்றைய நிலையில் காதல் வேகவேகமாகத் தொடங்கி வேகவேகமாக முடியும் நிலை காட்டப்படுகின்றது.

பதவி ஓய்வுபெற்றுவிட்ட பெரியவர் ஒருவரின் மனவுணர்வுகளையும் அவர் எதிர்நோக்கியுள்ள உடல்நோய், குடும்பச்சிக்கல் ஆகியவற்றை மையப்படுத்தியும் முதன்மைப்படுத்தியும் படைக்கப்பட்டுள்ள நாவல் அந்திமகாலம். இக்கதையில் வரும் பெரியவர் சுந்தரம் ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியர் ஆவார். கதைநடக்கும் காலப்பகுதியில் உடல், உளத் தொடர்பான பிரச்சினைகளில் சிக்கியுள்ளார். அதனால் அக,புற தனிமனிதப் போராட்டங்களுக்கு ஆளாகி வருந்துவதும் அவை தொடர்பான உணர்வுகளிலும் அவ்வப்போது ஆழ்ந்துபோவதும் கதை நெடுகிலும் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலைக்குறித்து, "உண்மையில் மலேசியத் தமிழ் நாவல்கள் கோட்பாடுகளின் சிந்தனைகளோடு படைக்கப்படுவது என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையிலே மட்டுமேயாகும். ஆனால், இங்குப் படைக்கப்படுகின்ற பெரும்பாலான நாவல்களில் கோட்பாட்டுச் சிந்தனைகள் இயைந்து வருவதை மறுக்கவியலாது. அவ்வகையிலே , ரெ.கார்த்திகேசுவின் அந்திமகாலம் என்ற நாவலிலும் கோட்பாடுகள் இயைந்து வந்துள்ளதைத் திறனாய்வின்வழி அறியமுடிகின்றது"(24) என்ற கருத்து இவண் கருதத்தக்கது.

கோடுகள் எல்லாம் கோலங்களாக மாறுவதில்லை. அதுபோல பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கெல்லாம் திருமண பந்தம் வாய்ப்பதில்லை என்ற செய்தியைத் தாங்கியுள்ள படைப்பு கோடுகள் கோலங்களானால் எனும் நாவல். இக்கதையில் வரும் ரேணுகாவிற்கு வருகின்ற வரனெல்லாம் உப்புசப்பற்ற புறக்காரணங்களால் தட்டிப்போகிற நிலையில் திருமணத்தின் மீதே வெறுப்பு ஏற்பட, தன்னை விரும்பிய பரணியையும் புறக்கணித்துப் பெற்றோருக்காகவும் உடன்பிறப்புகளுக்காகவும் திருமணமே செய்துகொள்ள மறுத்து விடுகிறாள். மாற்றங்களும்

புதுமைகளும் எவ்வளவோ வந்தும்கூட திருமணம் பெண்ணை ஏதோ ஒருவகையில் அடக்கியாளவே நினைப்பதனைக் கதாசிரியர் கதையில் காட்டிப் போகிறார். "நான் திருமணம் செய்துகொண்டால் என் குடும்பமும் இதுபோல் ஆதரவின்றிதான் தவிக்குமோ? திருமணத்துக்குப் பின்னாலும் என்னால் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்பது என்ன நிச்சயம்! அதற்குப்பின் எனக்கு ஏற்படும் பிரச்னைகள் எப்படியிருக்குமோ?"(25) என இந்நாவலில் வரும் ரேணுகாவின் சிந்தனையின்வழி இன்றைய நிலையில் திருமணத்திற்குமுன் ஒரு பெண் பல கோணங்களில் நன்றாகச் சிந்தித்தும் அலசியும் பார்த்தே திருமணத்தை மேற்கொள்ள வேண்டிய தேவையிலும் கட்டாயத்திலும் இருக்கிறாள் என்பதனை உணர்த்துகின்றது.

பிள்ளைகளின் திருமண விஷயத்தில் பெற்றோரின் அக்கறை சிலவேளைகளில் அது பிள்ளைகளையே ஊனமாக்கி விடுகிறது என்பதைக் காட்டும் நாவல் நொண்டிப்பறவை. இந்நாவலில் வரும் தந்தை கணபதி தம் மூத்தப்பெண் இந்திராவின் திருமணத்தினால் மற்றப் பெண்களுக்கு வரும் வரன்களையும் மறுக்க அதனால் விளைந்துவிட்ட அவலங்களினால் இளைய மகள் ஒருவனுடன் ஓடிப்போக, அதனைத்தாளாது உயிரையே விட்டுவிடுவதனைக் காட்டும் கதையிது. இந்நாவலில் முதிர்கன்னிப் பிரச்சினை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பழமையிலேயே ஊறிப்போனவர்கள் அதனைவிட்டு அவ்வளவு எளிதில் வெளியேற முடியாது என்பது கணபதியின் கதைமாந்தர்ப் படைப்பின்வழி உணர்த்தப்பட்டுள்ளது. "அப்பா, எனக்கு இன்னமே கல்யாணம் நடக்கப் போறதே இல்ல...! அந்த வயசுகூட எனக்குத் தாண்டிப் போச்சுப்பா...! என் வயசுக்குப் பொருத்தமான மாப்பிள்ளைக்கூட கிடைப்பாருங்கிறது சந்தேகம்தான்...ஆனா, அதுக்காக நான் கவலைப்பட போறதில்லே...அதனாலே, என்னைக் காரணம் காட்டி அர்த்தமில்லாததைக் கொஞ்சம் தளர்த்திக்கிட்டு நேத்து வந்த மாப்பிள்ளைக்கே பூரணியை முடிச்சிடுறதுதான் நல்லது..."(26) எனக்கூறும் இந்திராவின் கூற்றில் முதிர்கன்னிகளின் ஏக்கமும் உணர்வும் வெளிப்படுவதோடு அவர்களின் பரிதாபத்திற்குரிய இரக்கநிலையும் வெளிப்படுகின்றது.

கனவுத்தொழிற்சாலையான தமிழ்ச்சினிமா ஏற்படுத்திய தாக்கத்தையும் அதனால் விளைந்துவிட்ட பாதிப்புகளையும் உள்ளடக்கமாகக்-கொண்டு படைக்கப்பட்டுள்ள நாவல் கனவுப்பந்தல். சினிமா இல்லையேல் இன்று வாழ்க்கையே இல்லை என்று சொல்லும் அளவுக்குச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் கவர்ந்துள்ள சினிமாத்துறையில் காணப்படும் சீர்கேடுகளைத் தெளிவாக விளக்கும் நாவல் இது. இந்நாவலின் கதையின் தொடக்கமும் இறுதியும் மட்டும் மலேசியாவில் நடைபெறுவதாகக் காட்டப்படுகின்றது. மீதமுள்ள பெரும்பகுதிக் கதை தமிழகத்தில் நடக்கிறது. இந்நாவலில் வரும் வசந்தன் எனும் இளைஞன் மூலம் தமிழ்த்திரையுலகம் போலித்தனங்களும் ஒழுங்கீனங்களும் நிறைந்துள்ளது காட்டப்படுகின்றது. பெண்களின் கற்பு அங்கே கசக்கியெறியப்படும் மோசமானநிலை இந்நாவலில் வரும் லதா மூலப் காட்டப்படுகின்றது.

பெண்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் படிப்பறிவற்ற கணவனாயினும் அவனுடைய அதிகாரத்திற்கு முன்னால் எதுவும் செய்ய இயலாத நிலையில் அடங்கிப்போகும் அவலத்தைக் காட்டும் நாவல் விழலும் நீரும். ஒருகாலத்தில் ஆணாதிக்கம் பெண்கல்விக்கு மறுப்புத் தெரிவித்தது. ஆனால், காலவளர்ச்சியில் பெண்கள் படித்து ஆணைவிடச் சிறந்திருக்கும் வேளையில் ஆணாதிக்கம் வேறுவகைகளில் தொடரவே செய்கின்றது என்பதனைக் காட்டும் நாவல் இது. இக்கதையில்வரும் படித்த பெண்ணான கயல்விழி கணவனுக்குப் பணம் சம்பாதித்துத் தரும் ஓர் இயந்திரமாகவே பார்க்கப்படுகிறாள்.

மன ஊனங்கள் எனும் நாவல் போலி அரசியல்வாதியின் முகத்திரையைக் கிழித்தெறியும் படைப்பு. இந்நாவலில் வரும் போலி அரசியல்வாதி பசுபதி பணத்திமிராலும் அதிகாரப்போதையாலும் பெண்களின் கற்புக்குக் களங்கத்தை ஏற்படுத்துவது மிகையில்லாமல் காட்டப்பட்டுள்ளது.

ஊனக்கனவுகள் எனும் நாவல் படிப்பதற்கு வாய்ப்பற்ற ஏழை இந்திய மாணவர்கள் எவ்வாறு வன்னடத்தைக்கு ஆளாகி, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வீணாகிப் போகிறார்கள் என்பதனை விளக்குகின்றது. இக்கதையில்வரும் குமரேசன் வன்னடத்தைக்கும் வன்முறைக்கும் ஆளாகித் தறிகெட்டுத் திரியும் இளைஞர்களுக்குப் பிரதிநிதியாகக் காட்டப்பட்டுள்ளான்.

தனிமனித உணர்வுகளுக்கு முதன்மைகொடுத்துப் படைக்கப்பட்ட நாவல் சூதாட்டம் ஆடும் காலம். தாய்மையின் சிறப்பையும் பெருமையையும் காட்டும் நாவல் இது. பெற்றவளுக்கு நல்ல குழந்தையோ ஊனக்குழந்தையோ எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதான். இக்கதையில் வரும் தாய் சாரதா தன் ஊனக் குழந்தையைக் கொடிய கணவனிடமிருந்தும் தீய மாமியாரிட-மிருந்தும் காப்பாற்ற தன் வாழ்க்கையையே இழப்பது மட்டுமல்லாமல் கொலைகாரி என்ற வீண்பழிக்கும் ஆளாகிறாள். அத்தாயின் மூத்த மகன் கதிர் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் உண்மையறிந்து துடித்துப் போகிறான். "என்னைத் துறந்து போனதால் உன்னைப் பாசமில்லாதவள் என எண்ணி-யிருந்தேன். ஆனால் இன்னொரு உயிரின் மேல் எத்தனை பாசம் இருந்திருந்தால் நீ எந்தத் துன்பமும் ஏற்கத் தயாராக அந்த விடியற்காலையில் படி தாண்டிப் போயிருப்பாய்? தாயின் தியாகம் என்பதற்கு எல்லைகள் இல்லையா?"(27) எனவரும் அவ்விளைஞனின் உணர்வுகளும் சிந்தனைப் போக்குகளும் கதைக்கேற்ப இயல்பாக அமைந்து நாவலுக்குச் சிறப்பைச் சேர்க்கின்றது.

குயில்கூவி துயில் எழுப்ப எனும் நாவல் ஆணாதிக்கப்போக்கும் அதிகாரவெறியும் கொண்ட கணவனால் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகும் பெண்ணின் அக, புறப் போராட்டங்களை உள்ளடக்கமாகக் கொண்டது. இந்நாவலின் கதையில் வரும் தேவகி பொறுப்பற்ற கணவனுடன் போராட்டங்கள் நிறைந்த வாழ்க்கை நடத்தி நான்கு குழந்தைகளுக்குத் தாயாகி, யாருடைய ஒத்துழைப்புமின்றிப் பிள்ளைகளைக் கரைசேர்ப்பது காட்டப்படுகின்றது.

தோட்டப்புற வாழ்வைப் பின்னணியாகக்கொண்டு தோட்டப்புற முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட நாவல் இந்த மண்ணுக்கும் மணமுண்டு. இக்கதையில் வரும் தோட்டத்து இளைஞன் சண்முகம் தோட்டநிர்வாகத்தினாலும் தோட்டநிர்வாகத்தின் கைக்கூலிகளாலும் எதிர்நோக்கும் அக, புறப் போராட்டங்களே நாவலின் உள்ளடக்கமாக விரிந்துள்ளது. புறவாழ்வில் தோட்டநிர்வாகத்தின் பிரச்சினைகளை வென்றவன் அகவாழ்வில் தன் காதலில் தோல்வியைத் தழுவுகிறான். அவன் காதலி வசந்தி சூழ்ச்சியால் வேறொருவனுக்கு மனைவியாக்கப்-படுகிறாள். இந்நாவலின் கதையைப் படிக்கும்பொழுது செம்மண்ணும் நீலமலர்களும் (1969), பால்மரக்காட்டினிலே (1976) ஆகிய நாவல்களின் கதைகள் நம நினைவலைகளில் வந்து மோதுவதைத் தடுக்க இயலவில்லை. அதேபோன்று இந்நாவலின் கதைத்தலைவன் சண்முகத்தை நினைக்கும்பொழுதும் செம்மண்ணும் நீலமலர்களும் நாவலின் கன்னியப்பனும் பால்மரக்காட்டினிலே நாவலின் பாலனும் நம்மனக்கண்ணில் வந்துவந்து போவதையும் தவிர்க்க இயலவில்லை.

கலையுலகில் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அவலத்தைப் பேசும் படைப்பு வேள்வி. கலையுலகில் பெண்களுக்கு மறைமுகமாகக் கொடுக்கப்படும் தொல்லைகள் குறிப்பாகக் காமத்தொல்லைகள் இந்நாவலில் வரும் பவித்ரா எனும் கதைமாந்தர் மூலம் வெளிப்பட்டுத்தப்பட்டுள்ளது. கொத்தித்தின்னும் கழுகுகளைப் போலவும் விழுங்கக் காத்திருக்கும் முதலைகளைப்போலவும் உள்ள மோசமான ஆண்களே கலையுலகில் அது சினிமாவாகட்டும் சின்னத்திரையாகட்டும் நிறைந்திருக்கிறார்கள் என்ற செய்தியைத் தாங்கியுள்ள படைப்பு.

கடந்தகால வாழ்வியலையும் சமகால வாழ்வியலையும் உள்ளடக்கமாகக்கொண்ட நாவல்களின் கதைகளின் அமைப்பைக் காணும்போது அவை மிகுதியும் நேர்க்கோட்டுக் கதைகளாக, நேர்க்கோட்டுத் தன்மையில் அமைக்கப்பட்டுள்ளது தெரியவருகின்றது. பேராசிரியர் ரெ. கார்த்திகேசு, ப.சந்திரகாந்தம், கோலலங்காட் அ.ரெங்கசாமி, சீ. முத்துசாமி போன்றாரின் படைப்புகளின் கதைகள் நேர்க்கோட்டுத்தன்மையில் அமைக்கப்படாமல், சிக்கல்கள் நிறைந்தும் நிரல்படக் (chronological order) காட்டப்படாமல் மனவுணர்வுகளுக்கு ஏற்ப மாறிமாறிக் காட்டப்படுவதுமான நிலை காணப்படுகின்றது. இவர்களது இம்முயற்சிகள் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் உள்ளன. இவர்களது பாணியிலோ அல்லது வேறு புதிய முறைகளிலோ புதிய தலைமுறை எழுத்தாளர்கள் நாவல்கள் படைத்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பர் எனத் துணிதற்கு இடமுண்டு.

**8. தொகுப்புரை:**

இதுவரை பார்த்தவற்றால் பின்வரும் செய்திகள் புலனாகின்றன. நாவல் இலக்கியம் நிகழ்காலச் சமுதாயத்தின் சமகாலப் பிரச்சினைகளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி. அது வாழ்வின் அர்த்தங்களைத் தேடி வெளிப்படுத்துவதோடு எதிர்காலச் சமுதாயத்திற்கு வழியைக் காட்டிச் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது. தமிழகத்தின் தாக்கத்தினால் மலேசியாவில் நாவல் இலக்கியம் தொடங்கப்பட்டிருந்தாலும், காலப்போக்கில் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் தனக்கேயுரிய தனித்துவக் கூறுகளையும் பண்புகளையும் கொண்டு விளங்குகின்றது. விடுதலைக்குப்பின்னர் மலேசியத் தமிழ் நாவல்கள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் வாழ்வியல் கூறுகளைச் சிறப்பாகவும் முழுமையாகவும் வெளியிடத் தொடங்கின. குறிப்பாகத் தோட்டப்புற மக்களின் வாழ்வியல் சிக்கல்கள் நாவல்களில் வெளிபடுத்தப்பட்டன. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது. அவற்றுள் மிகுதியானவை குறுநாவல்களாகவே அமைந்துள்ளன. மலேசியத் தமிழ் படைப்பாளர்கள் மத்தியில் குறுநாவல் பற்றிய தெளிவு காணப்படுவதால் அவ்வடிவத்தை அவர்கள் உணர்ந்து செம்மையாகப் படைத்து வருவது தெரிய வருகின்றது. குறுநாவல்கள் வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் கணிசமான பங்கை ஆற்றி வருகின்றன.

தொன்னூறுகளுக்குப்பின் தொடர்கள் எழுதிய படைப்பாளர்கள் அவற்றை நூல்வடிவில் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டியுள்ளனர். தொன்னூறுகளில் பெண் நாவல் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகவும் கவலையளிப்பதாய் உள்ளது. தொன்னூறுகளில் ஒருவரும் புத்தாயிரத்தில் இருவரும் என காணப்படுவது வருத்தமளிப்பதாய் உள்ளது. தொன்னூறுகளில் 1996-ஆம் ஆண்டிலும் புத்தாயிரத்தில் 2003, 2004-ஆம் ஆண்டுகளிலும் எந்தவொரு நாவலும் நூல்வடிவில் வராதது குறிப்படத்தக்கது. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தின் எண்ணிக்கை கூடவும் தரம் உயரவும் பல்வேறு நிலைகளில் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாவல் தொடர்பான கருத்தரங்குகள், நாவல் எழுதும் போட்டிகள் இவ்வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தொன்னூறுகளில் சிறுகதையாசிரியர்கள் பலர் நாவல் துறையில் தங்களின் கவனத்தைத் திருப்பியுள்ளனர்.

இந்நிலை புத்தாயிரத்திலும் தொடரவே செய்தது. தொன்னூறுகளுக்குப்பின் மூத்த எழுத்தாளர்களின் பங்களிப்பு நாவல் துறைக்குக் கணிசமாகக் கிட்டியுள்ளதால் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் வளம் பெற்றுள்ளது. இவர்களுள் ரெ.கார்த்திகேசுவின் பங்களிப்பு மலேசியத் தமிழ்நாவலுக்குத் தரம், திறம், உரம் ஆகியவற்றைச் சேர்ப்பதால் அவரை மலேசியத் தமிழ் நாவல்துறையின் முன்னோடி எழுத்தாளர் என்று துணிந்து குறிப்பிடலாம்.

தமிழ்நாவலின் தொடக்ககால போக்கான மர்மமும் துப்பறிதலும் இந்தத் தொன்னூறுகளிலும் மலேசியத் தமிழ்நாவல்களில் தொடர்வதனைக் காணமுடிகின்றது. பெண்ணியச் சிந்தனைகளை வலியுறுத்தி நாவல்கள் எழுதும் புதிய போக்குத் தொன்னூறுகளுக்குப்பின் காணப்படுகின்றது. மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களுள் சிலர் மிதவாதப் பெண்ணியத்தையும் சிலர் தீவீரவாதப் பெண்ணியத்தையும் ஆதரித்துப் பின்பற்றுகின்றநிலை காணப்படுகின்றது. மலேசியாவில் நாவல்களில் காட்டப்படும் பெண்ணியம் ஆண் எழுத்தாளர்களால் பேசப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் நடைபெற்ற 'சம்ப்பா-நரேந்தர்' குறுநாவல் போட்டியில் பேராசிரியர் ரெ.கார்த்திகேசுவின் நாளைக்கு எனும் படைப்பு பரிசு பெற்றுள்ளதானது மலேசியத் தமிழ் நாவலின் சிறப்புக்குக் கிடைத்த ஓர் அங்கீகாரம்.

புத்தாயிரத்தில் நிறையத் தொடர்கள் எழுதப்பட்டு, பின் அவற்றுள் பல நூல்வடிவம் பெற்றன.புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் நாவல் ஆசிரியர்களுள் நாவலைச் சிறப்பாகப் படைக்க வேண்டும் என்ற உந்துதலில் கள ஆய்வை மேற்கொண்டு நாவல் படைத்து நாவல் இலக்கியத்திற்கு நடப்பியல் தன்மையைத் தந்துச் சிறப்புச் சேர்த்துள்ளனர். புத்தாயிரத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தமிழ் நேசன் நாளிதழ், மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை ஆகியவற்றின் பங்களிப்பு நாவல்துறை வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதாக உள்ளன. போட்டியில் வெளிவந்த நாவல்களுள் பல அச்சில் வராமல் உள்ளன.

2007-இல் மூன்று நாவல்/குறுநாவல் எழுதும் போட்டிகள் அறிவிக்கப்பட்டுள்ளதானது மலேசியத் தமிழ்நாவல் தன் பொற்காலத்தை நோக்கிச் செல்லுவதனைக் காட்டுவதாயுள்ளது. அண்மைய பத்தாண்டுகால மலேசியத் தமிழ் நாவல்கள் மலேசிய இந்தியச் சமுதாயத்தின் கடந்தகால வாழ்வியலையும் சமகால வாழ்வியலையும் உள்ளடக்கமாகக் கொண்டு விளங்குகின்றன. தொன்னூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்களில் தனிமனித உணர்வுகள் மேலோங்குதலும் அவற்றையொட்டிய போராட்டங்கள் வலுபெறுதலும் காணப்பட்டன. தொன்னூறுகளுக்குப்பின் சமகால வாழ்வியலை உள்ளடக்கமாகக் கொண்ட நாவல்களில் சமுதாய உணர்வு மேலோங்கிக் காணப்படுகின்றது. போதைப்பொருள் பிரச்சினை, இளைஞர்களின் வன்னடத்தை, பெண்ணுரிமைக்கான குரல்கள், சினிமா மோகம் கொண்டுவந்த சீரழிவுகள், பங்களாதேஷ் இளைஞர்களால் ஏற்பட்ட தொல்லைகள் போன்ற நடப்புப் பிரச்சினைகள் பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 9. அடிக்குறிப்புகள்

1. எழில்முதல்வன் (மா.இராமலிங்கம்), (1979). தேசிய உணர்வு, நூறாண்டு நாவல் தரும் செய்தி, சென்னை, (சென்னை கிறித்துவ இலக்கியச் சங்கம்), பக்.65
2. தமிழ் நேசன், 31.08.2007, பக்.17
3. எம்.ஏ.இளஞ்செல்ஙன், (1999). வானம் காணாத விமானங்கள், பக். X
4. முன்னூல், பக். X
5. தட்சிணாமூர்த்தி.பி, (1979). நாவல் ஆய்வு, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, பக்.48
6. சுப்பிரமணிய்.ச.வே. (1983). எண்பத்தொன்றில் தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக்.101
7. சீதாலட்சுமி.வே. (1985). தமிழ் நாவல்கள் (அகரவரிசை), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, பக். XXXIX
8. மலேசியத் தமிழ் நாவல் கருத்தரங்கின் (1992) ஐந்து படைப்புக்கட்டுரையின் தலைப்புகள்

அ. பேராசிரியர் ரெ.கார்த்திகேசு:
- அண்மைய மலேசியத் தமிழ்நாவல்களில் வாழ்க்கை, கற்பனை, மலேசியச்சூழல் ஆகியவை பயன்படுத்தும் விதங்கள்: ஒரு பார்வை.

ஆ. டாக்டர் வே. சபாபதி:
- மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம்,
- விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள்

இ. டாக்டர் லெட்சுமி மீனாட்சிசுந்தரம்:
- மலேசியத் தமிழ் நாவல்கள் (1960 -79 வரை)

ஈ. டாக்டர் எம். கிருஷ்ணன்:
- மலேசியத் தமிழ் நாவல்கள் (1980 - 90 வரை)

9. சபாபதி.வே. (1996). மலேசியத் தமிழ் நாவல் வளம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.ப. 152-162
10. கரார்த்திகேசு. ரெ, தேடியிருக்கும் தருணங்கள், ப.46
11. கார்த்திகேசு. ரெ, நாளைக்கு, மனசுக்குள், ப.ப 54-55
12. பீர் முகம்மது, பெண் குதிரை, ப.92
13. கணையாழி, (1999) செப்டம்பர் மாத இதழ், ப.ப 53 - 65
14. கணையாழி, (1999) சப்டம்பர் மாத இதழ், ப.ப 63 - 64
15. மக்கள் ஓசை (ஞாயிறு ஓசை), 15.07.2007, பக். 2
16. அ.ரெங்கசாமி (கோலலங்காட்), லங்காட் நதிக்கரை, பதிப்புரை
17. தமிழ் நேசன், 08.07.2007, பக். 19
18. பின்னிணைப்பினைக் காண்க.
19. பின்னிணைப்பினைக் காண்க.
20. ரெங்கசாமி.அ, லங்காட் ந்திக்கரை, ப.76
21. முத்துசாமி. சீ, மண் புழுக்கள், ப. 57
22. சந்திரகாந்தம்.ப, அமுதசுரபிகள், ப. 394-395
23. கார்த்திகேசு.ரெ, காதலினால் அல்ல, ப. 277
24. மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்விதழ், 8-வது பொகுப்பு, ப. 89
25. பாவை, கோடுகள் கோலங்களானால், ப.ப 103 -104
26. பாவை, நொண்டிப்பறவை, ப. 129
27. கார்த்திகேசு. ரெ, சூதாட்டம் ஆடும் காலம், ப.171

**10.** பின்னிணைப்பு - தொன்னூறுகளுக்குப்பின் வெளிவந்த மலேசியத் தமிழ் நாவல்கள் (1990 - 2007)

1. வா! அருகில் வா! (கே. நடராஜன்) - 1990
2. நெஞ்சுக்குத் தெரியும்! (கே. நடராஜன்) - 1990
3. ஓடும் நதி (உம்மு சல்மா) - 1990
4. மனவீணை (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1991
5. கனவுகளின் சுயம்வரம் (அரவிந்தன்) - 1991
6. இதய ரோஜா (ந. சந்திரன்) - 1991
7. விலாங்குகள் (மு. அன்புச்செல்வன்) - 1991
8. ராகதேவதை (ரெ. கார்த்திகேசு) - 1991
9. கொப்புளங்கள் (ரெ. கார்த்திகேசு) - 1991
10. மனசுக்குள் கட்டுகிற மணற்கோபுரங்கள் (ரெ. கார்த்திகேசு)-1991
11. பேசும் ஊமைகள் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1991
12. பௌர்ணமி நிலவில் (பூ. அருணாசலம்) - 1992
13. அழகின் ஆராதனை (மா. இராமையா) - 1992
14. அவளுக்கென்று ஓர் மனம் (எம். எஸ். விஜயராஜ்) - 1992
15. தேடியிருக்கும் தருணங்கள் (ரெ. கார்த்திகேசு) - 1993
16. சயாம் மரண ரயில் (ஆர். சண்முகம்) - 1993
17. புதியதோர் உலகம் (அ. ரெங்கசாமி) - 1993
18. சுவடுகள் (மா. இராமையா) - 1994
19. அம்மாவும் சாரங்கனும் (ரெ. கார்த்திகேசு) - 1994
20. சாரங்கன் வருகிறான் (ரெ.கார்த்திகேசு) - 1995
21. சங்கமம் (மா.இராமையா) - 1995
22. ஐந்தாவது பௌர்ணமி (சரஸ்வதி அரிகிருஜ்ணன்) - 1995
23. மனித்தப்பிறவியும் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1995
24. நானும் ஒரு தமிழ்ப்பெண்தான் (சரஸ்வதி அரிகிருஜ்ணன்) - 1995
25. சுவர் (டாக்டர் சி. சொக்கலிங்கம்) - 1997
26. பெண் குதிரை (சை. பீர்முகம்மது) - 1997
27. நித்திலப்பூ (வீ. கு. சந்திரசேகரன்) - 1997
28. நெருப்புக்கொடிகள் (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998

29. விடியலுக்காக (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998
30. விலங்கு (நா. ஆ. செங்குட்டுவன்) - 1998
31. அந்திமகாலம் (ரெ. கார்த்திகேசு) - 1998
32. கோடுகள் கோலங்களானால் (பாவை) - 1998
33. நொண்டிப்பறவை (பாவை) - 1998
34. அம்மா (அ. கந்தன்) - 1998
35. விடியலை நோக்கி (அ. கந்தன்) - 1998
36. எழுச்சி (அ. கந்தன்) - 1999
37. விழலும் நீரும் (மா. இராமையா) - 1999
38. வானம் காணாத விமானங்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
39. மோகங்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
40. பசித்திருக்கும் இளம்கொசுக்கள் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
41. கனகாம்பரமும் கிளிஞ்சல் மலர்களும் (எம். ஏ. இளஞ்செல்வன்) - 1999
42. காதலினால் அல்ல (ரெ. கார்த்திகேசு) - 1999
43. நாளைக்கு (ரெ. கார்த்திகேசு) - 1999
44. கள்ளச்சந்தையில் சொக்கத்தங்கங்கள் (செங்கதிரோன்) - 2000
45. துன்பங்கள் உறங்குவதில்லை (நா. ஆ. செங்குட்டுவன்) - 2001
46. மன ஊனங்கள் (மா. இராமையா) - 2001
47. ஊனக்கனவுகள் (மா. இராமையா) - 2001
48. குயில்கூவி துயில்எழுப்ப (நிர்மலா பெருமாள்) - 2002
49. நல்லவராவதும் தீயவராவதும் (ரெ. கார்த்திகேசு) - 2002
50. தீக்காற்று (ரெ. கார்த்திகேசு) - 2003
51. புழுத்துளைகள் (ரெ. கார்த்திகேசு) - 2004
52. இந்த மண்ணுக்கும் மணமுண்டு (சி. வடிவேலு) - 2005
53. நினைவுச்சின்னம் (அ. ரெங்கசாமி) - 2005
54. சூதாட்டம் ஆடும் காலம் (ரெ.கார்த்திகேசு) - 2005
55. கனவுப்பந்தல் (நா. ஆ. செங்குட்டுவன்) - 2005
56. கால்களே நில்லுங்கள் (நா. ஆ. செங்குட்டுவன்) - 2005
57. லங்காட் நதிக்கரை (அ. ரெங்கசாமி) - 2006
58. மண்புழுக்கள் (சீ. முத்துசாமி) - 2006
59. அமுதசுரபிகள் (ப. சந்திரகாந்தம்) - 2006
60. தனயனைக் காப்பாற்றிய தாய் (ஆர். சண்முகம்) - 2006
61. இமயத் தியாகம் (அ. ரெங்கசாமி) - 2007
62. வேள்வி (நிர்மலா பெருமாள்) - 2007
63. அக்கினி வளையங்கள் (சை. பீர் முகம்மது) - 2007

போட்டியில் பரிசுகள் பெற்றவை. ஆனால், இன்னும் நூலுருவம் பெறாத நாவல்கள்

1. ஞானத்தின் வாசலிலே (ம. நவீன்)
2. நொய்வப்பூக்கள் (கோ. பண்ணியவான்)
3. அசலா? மாற்றமா?
4. மறுமலர்ச்சி
5. பெண்ணினத்தின் இரு மாபெரும் போராளிகள்
6. வாழ்க்கையே அலைபோலே.
7. இக்கரையா? அக்கரையா?
8. மனவீணை
9. மண்மாற்றம்
10. ஆண்களும் பெண்களும்
11. மலரே மௌனம் ஏன்?
12. உனக்காகவே...